


# வேதாத்திரியப் பார்வையில்

# ஆழ்வார்கள் காட்டும் முக்தி


## அருள்நிதி

## மன்னார்குடி பானுகுமார்


இதனுள்ளே


1. முக்திக்கு ஏற்றது மானிடப் பிறவி
2. மனிதப் பிறவியின் நோக்கமே முக்தி
3. ஜீவன் முக்தி நிலை
4. பிறவிக் கடலை கடப்பதுதான் முக்தியா?
5. பக்தி ஞானம் முக்தி

6. பாவங்கள் நீங்கப் பெற்ற நிலை
7. மோட்ச இன்பத்தை அடையும் வழி
8. துரியாதீத தவத்தின் ஆணி வேர்?
9. முக்தி நிலைகளில் பாடிய ஆழ்வார்கள்
10. பிரம்ம ஞானமே முக்தி

# 1. முக்திக்கு ஏற்றது மானிடப் பிறவி

ஒரு மனிதனை பேரறிவாளனாகவும், ஞானியாகவும் ஆக்குவது எது? அவன் தானாக நினைப்பதும் ஆராய்வதும் எண்ணுவதும்தானே!
(விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 6 – பக்.196)

உலகிலேயே மிக உயர்ந்த பிறப்பு மனிதப் பிறப்பு. அதனால்தான் ஔவையார் சொன்னார்."அரிது அரிது மானிடராதல் அரிது' என்று.

உலகில் உள்ள எல்லாத் தோற்றங்களிலும் எல்லா உயிர்களிலும் சிறந்த மேலான ஒரு இயக்க நிலை மனித உருவம்.

எல்லாம் வல்ல இறைநிலையை முழுமையாக எடுத்துக் காட்டி பிரபலிக்கும் கண்ணாடி மனிதன்.

இயற்கையின் ஒரு சிறு கூறு தான் மனிதன். ஆனாலும் பேரியக்க மண்டலத்தில் விளங்கும் எல்லாச் சிறப்புகளும் நுணுக்கமாக உள்ளடக்கம் பெற்ற திருவுருவமாக மனிதன் திகழ்கிறான்.

மனிதனுடைய அறிவானது பிரபஞ்சத்திற்கு ஆதிபொருளாக உள்ள தெய்வநிலை.

மனிதபிறவி என்பது அற்புதமானது

முற் பிறவியில் செய்த நல்ல கர்மத்தால் இந்த பிறவியில் மனிதனாக பிறக்கிறோம் என்று புராணங்கள் சொல்லுகின்றன

மனிதனாக பிறப்பதற்கு அரிய மாதவம் செய்திட வேண்டும்

அதிலும் எடுத்த பிறவியிலே ஆரோக்கியமான பிறவி எடுப்பது நமக்கு கிடைத்த வரம் என்று சொல்லலாம்

இந்த பிறவியின் பயனை நன்றாக அறிந்து உடல், மனம்,மூளை மூன்றையும் இணைத்து செயல்படுத்தி வாழ்க்கை பயணத்தை சலனமின்றி தெளிவான பாதையில் வழி நடத்தி அமைதி, அன்பு , அறிவு மூன்றையும் மக்களோடு பகிர்ந்து கொண்டு உன்னதமான வாழ்க்கையை வாழ்பவன் இறையருளை பெறுகிறான்.

மானுடப் பிறவி மட்டும் தான் இறைவன் மீது பக்தி செலுத்தி ஞானம் அடைந்து முக்தியைப் பெறும் பிறவியாக கருதப்படுகிறது.

பரம்பொருளான ஸ்ரீமத் நாராயணன் மட்டுமே பரமப் பரமபதத்தை அளிக்கக் கூடிய கடவுளாவார் என்று வைணவ சமயம் கூறுகிறது.

பகவத்பக்தி மூலமாக மோட்சத்தைப் பெறவ  தற்கும் பகவானின் அனுகிரகம் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

உடம்பு கொண்ட உயிர்கள் எந்நாளில் தன் உடலை விடும் என்று யாருமே அறிந்து கூற முடியாது. இவ்வுடம்பு மின்னலைப் போன்று நிலையற்றது என்பதை நம்மாழ்வார்

'மின்னின் நிலை இல மன் உயிர் ஆக்கைகள்
என்னுமிடத்து இறை உன்னுமின் நீரே''

அழிவற்ற ஆத்மாக்கள் தங்கும் உங்கள் உடம்புகள் மின்னலைப் போல நிலையற்றவை. எனவே நீங்கள் இறைவனை நினையுங்கள் என்று கூறுகிறார். மேலும் அவரே

''கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர் ஒளி மாயோன் மருவிய கோயில்
வளர் இளம் பொழில் சூழ் மாலிருஞ் சோலை
தளர்வு இலர் ஆகில் சார்வது சதிரே''

அறிவு கொழுந்து விட்டு வளரும் ஞான ஒளி உடைய இளம் வயது போவதற்கு முன்னே, குன்றாத ஒளி உடைய மாயோனின் திருமாலிருஞ் சோலை மலையை அடைவது உங்கள் ஆத்ம உய்வுக்குச் சிறந்ததாகும்.

வளர்ந்து செழித்த இளஞ்சோலைகளால் சூழப்பட்ட அம்மலையைத் தளர்ச்சி இல்லாமல் அடைவதே ஆத்மாவுக்கு ஏற்ற உறுதிப் பொருள் ஆகும் என்கிறது ஆழ்வார் பாசுரம்.

முக்திக்கு ஏற்றது மானிடப் பிறவி. இந்த மானுடப் பிறவியின் மனித மாண்பினை முதலில் அறிந்து கொள்வோம். புரிந்து கொள்வோம். விளங்கிக் கொள்வோம் என்கிறது வேதாத்திரியம்

"மனிதவுயிர் பிறவியதன் மதிப்புணர வேண்டும்
 மனம் உயிர்மெய் மூன்றான மடைபொருள்களான,
மனிதனுடைய ஆற்றல்களை மலர வைக்க வேண்டும்.
 மறைந்திருக்கும் உட்பதிவாம் பலவினைகள் தம்மை
மனிதனே மாற்றி அறந் செயல்பதிவு செய்து
 மனத்தூய்மை வினைத்தூய்மை பெற்றுபரத் துறைந்து
மனிதனவன் உயர்மனித னாகவாழச் செய்யும்
 மனவளக் கலையிதனைப் பரப்பிநலம் காண்போம்." (ஞாக.பா.292)

ஒரு மனிதனின் வாழ்க்கை தான் அந்த மனிதனின் தன்மையை எடுத்து காட்டுகிறது

உடல் அழிந்த பின்பு அவனுடைய நல்ல குணங்கள், அவன் செய்த நல்ல செயல்கள் என்றும் நம்மோடு நிலைத்து நிற்கின்றன

இவைதான் ஒரு மனிதனின் வாழ்க்கையை வரலாறாக மாற்றுகிறது

மனிதன் எத்தனை காலங்கள் வாழ்ந்தான் என்பது முக்கியமில்லை அவன் எப்படி வாழ்ந்தான் என்பது தான் முக்கியம் இதை அறிந்து வளமான ஆனந்தமான வாழ்க்கை வாழலாமில்லையா!

# 2. மனிதப் பிறவியின் நோக்கமே முக்தி

- ஒருமை உணர்வுதான் அறிவு. பன்மை அல்லது வேற்றுமை உணர்வே அறியாமை. இந்த அறிவு உங்கள் பிறப்புரிமை. நான் இதை உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நாம் விரும்புகிறோமோ இல்லையோ, நமக்கு முக்தி கிடைத்தேதான் தீரும். (விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 6 – பக்.236-237)

மனிதனுடைய வாழ்வின் அறுதி லட்சியம் என்ன?

ஆறாவது அறிவைக் கொண்ட கொண்ட இந்த மனிதனின் வாழ்வின் நோக்கம் அறிவு முழுமை பெற வேண்டும்.

இதனை மோட்சம் என்றும் முக்தி என்றும் கூறுகின்றனர்.

பரம்பொருளாகிய ஸ்ரீமத் நாராயணனின் இருப்பிடமான பரமபதம் அல்லது வைகுண்டம் சென்று அங்குள்ள சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையே முக்தி அல்லது மோட்சம் என்று வைணவத்தில கருதப்படுகிறது.

முக்தியடைவதைப் பற்றி நாராயிரதிவ்யப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் பாடியிருக்கும் பாசுரங்களில் பலவற்றில் இவற்றை நாம் காணலாம்.

**மனிதப் பிறவியின் முக்கியத்துவம்...**

மனிதப் பிறவியில் மட்டும்தான் பகுத்துப் பார்க்கும் தன்மையை பயன்படுத்தி விழிப்புணர்வுடன் செயல்பட முடியும்.

இந்த நிமிடம் வரை நீங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் இப்போது இந்த வினாடி நீங்கள் விழிப்புணர்வுடன் செயலாற்ற முடியும், இல்லையா?

இதுவரை நீங்கள் மிகவும் மோசமான வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம், அது ஒரு பொருட்டல்ல. இந்த வினாடி நீங்கள் விழிப்புணர்வுடன்

செயல்பட முடியும். அந்த சுதந்திரமும், பகுத்துப் பார்க்கும் தன்மையும் எப்போதும் உங்களிடம் இருக்கிறது.

விழிப்புணர்வு ஒரு தீவிரத்திற்கு வந்து விட்டாலோ, அல்லது தீவிரம் குறைந்து விட்டாலோ உடலில் வாழ்வதற்கு தகுதியற்றவர்கள் ஆகிறீர்கள்.

அந்த நிலையில், குமிழியை முழுவதுமாக உடைத்து விடக்கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது.

குமிழியை உடைத்த பிறகும் உடலில் தங்கியிருக்க வேண்டுமானால் அதற்கு தொழில் நுட்பம் தேவைப்படுகிறது.

எல்லாத் தந்திரங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அல்லது உடலைத் தக்க வைத்துக் கொள்ள நாமாகவே சில கர்மாக்களைச் செய்ய வேண்டும்.

**ராமகிருஷ்ணரின் உணவுப் பற்று...**

உதாரணத்திற்கு ராமகிருஷ்ண பரமஹம்சரை எடுத்துக் கொள்வோம்.

அவர் வாழ்ந்த காலத்திலேயே மக்கள் அவரை ஒரு கடவுளாகப் பார்த்தார்கள்.

ஆனால் ராமகிருஷ்ணர் உண்ணும் விஷயத்தில் வெறி பிடித்தது போலிருந்தார். இது உங்களுக்கு தெரியுமா?

அவர் உணவு விஷயத்தில் பைத்தியமாக இருந்தார். சீடர்களுடன் பேசிக் கொண்டிருப்பார்,

திடீரென அவர்களை காத்திருக்கச் சொல்லிவிட்டு சமையலறைக்குச் சென்று, சாரதாவைப் பார்த்து “இன்று என்ன சமைத்துக் கொண்டிருக்கிறாய்?” என்று கேட்பார்.

உணவு விஷயத்தில் அவ்வளவு பைத்தியமாக இருந்தார். சாரதா, ராமகிருஷ்ணரைப் பார்த்து “நாங்கள் உங்களை கடவுள் போல பார்க்கிறோம், ஆனால் நீங்கள் உணவின் மீது இவ்வளவு பைத்தியமாக இருக்கிறீர்களே, என்ன இது?” என்று கேட்பார்.

“அது சரி, இன்று என்ன சமையல்?” என்று ராமகிருஷ்ணர் திருப்பிக் கேட்பார்.

ஒரு நாள் சாரதாவிற்கு இது மிகவும் அவமானமாக இருந்ததால், கோபத்துடன் ராமகிருஷ்ணரைப் பார்த்து திட்டிவிட்டார்.

அதற்கு ராமகிருஷ்ணர், “ஏதாவது ஒரு நாள் நீ தாளியை கொண்டுவரும் போது (தாளி என்பது உணவுகள் பரிமாறப்பட்ட தட்டு), அன்று உணவில் அக்கறை காட்டாமல் இருந்தால் அன்றிலிருந்து மூன்று நாட்கள் மட்டுமே நான் இருப்பேன் என்பதைத் தெரிந்துகொள்” என்று சொன்னார்.

அவர் அப்படி சொன்ன ஆறு வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் சாரதா உணவெடுத்துச் சென்றபோது, அவர் முகம் திரும்பிக் கொண்டார்.

ராமகிருஷ்ணர் முன்பு சொன்னது, திடீரென சாரதாவின் நினைவிற்கு வர அவர் கதறி அழுதார்.

ராமகிருஷ்ணர் சொன்னார், “இப்போது அழுவதில் பயனில்லை, காலம் வந்துவிட்டது” என்று. ராமகிருஷ்ணர் உணவின் மீது ஆசை வைத்து விழிப்புணர்வுடன் கர்மா உருவாக்கிக் கொண்டார்.

உடலைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஒரு நாளைக்கு பத்து தடவையாவது உணவின் மீது ஆசையை உருவாக்கிக் கொள்வார்.

மற்றபடி சாதாரணமாக அமர்ந்திருந்தாலே உடலை விட்டு விடுவார். அவர் தனக்கென சில வேலைகளை வைத்திருந்ததால் மேலும் சில காலத்திற்கு உடலில் இருக்க தீர்மானித்திருந்தார்.

இது போல வெவ்வேறு யோகிகள் பல வழிகளைக் கையாண்டார்கள். சில எளிமையானவை, சில சிக்கலானவை.

## மனிதப் பிறப்பின் நோக்கம் – வேதாத்திரியம்

ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதன் வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும்.

இயற்கையின் முழுமையை உணர வேண்டும், எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றி, வந்து இயங்கிக் கொண்டி ருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுதான் பிறப்பின் நோக்கம். (This and this alone is the purpose of life).

சுருங்கச் சொன்னால் இயற்கையானது பல படித்தளமான பரிணாம இயக்கத்திலே தோற்றங்களாகி, ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவு வரையிலே வந்து மனிதனாகி, தன்னுடைய மதிப்பையும், தன்னுடைய தகைமையையும், தன்னுடைய அழகையும் ரசிக்கவும், உணரவும் அந்த இயற்கையே எடுத்துக் கொண்ட ஒரு உன்னதமான வடிவம் எதுவோ அதுதான் மனிதன்.

மனிதனில் தான் அறிவினுடைய முழுமையைப் பெற முடியும்.

பழக்கத்தின் வழியே நாம் சிக்கி, தேவை, பழக்கம், சூழ்நிலையின் கட்டாயம் (நிர்பந்தம்). இந்த மூன்றினாலும் உந்தப்பட்டுச் செயல் செய்து கொண்டிருக்கிறோம்.

இவற்றிலிருந்து விளக்கம் பெற்று, விளக்கத்தின் வழியே நாம் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமானால் உடனடியாக விளக்கம் வராது, பழக்கத்திலிருந்து உடனடியாக மாறி விடவும் முடியாது.

முறையான பயிற்சி வேண்டும். விளக்கத்திலேயும் பயிற்சி வேண்டும்.

அப்படி விளங்கிக் கொண்ட பிறகு நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போக வேண்டும், அதிலுள்ள வேறுபாடு, தூரம் என்ன என்பதைக் கண்டு, படிப்படியாகத் தன்னை மாற்றி உயர்த்தி அந்த இடத்தை அடைய வேண்டும்.

அத்தகைய திருப்பம் எதுவோ அது தான் பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் எனப்படும் ஆன்மீக வாழ்வு ஆகும்

பிரம்மம்

"நான் என்ற பிரம்மத்தை அறிந்தேன் அஃது
  நினைவதனின் முடிவாகும், மூலமாகும்
சூனியமே! தோற்றமெலாம் அதிலிருந்தே!
  சுத்த வெளி! மௌனமது! உவமை இல்லை!
ஊன் உருவில் ஓடும் உயிர்ச்சுழற்சி வேகம்
  உற்பத்தி செய்கின்ற மின் சாரத்தில்
தோன்றுகின்ற அலை இயக்கம் அறிவு ஆகும்.
  சுயநிலையில் தியானித்து அறிதல் வேண்டும்." (ஞாக.பா.1405)

இயல்பறிதல்:

"சுகதுக்கம் அனுபவித்தேன், சோர்வு கண்டேன்
  சுய அறிவால் ஆராய்ந்தேன், முடிவுகாண
சுகதுக்கம் உடலியங்கும் அறிவில் கண்டேன்
  சூட்சுமமாய் மனங்குவித்து, ஒடுங்கிநின்று
சுகதுக்கம் கடந்துமோன நிலையுணர்ந்தேன்
  சொரூபத்தில் அரூபநிலை யறிந்துவிட்டேன்
சுகதுக்கச் சுழல்தாண்ட முறை கேட்போருக்குச்
  சொற்குறிப்பால் "கட+உள்" என்று சுருக்கிச் சொல்வேன்."
(ஞாக.பா.713)

மனிதப் பிறவியின் நோக்கம் என்ன?

நீங்கள் எந்த மூலத்திலிருந்து வந்தீர்களோ அந்த மூலத்துடனே ஒன்றாகி, இனி பிறப்பு-இறப்பு சுழலில் மீண்டும் மாட்டாமல் தப்பிப்பது — இதுதான் இந்து மதத்தின் ரிஷிகளும், மகாத்மாக்களும், ஞானிகளும், அவதார புருஷர்களும் நமக்குச் சொல்லித்தருவது.

# 3. ஜீவன் முக்தி நிலை

- மனதை வெல்வது அவ்வளவு எளிதல்ல. வெளியுலகம் நம் மனதை எவ்வளவு தூரம் பாதிக்க இயலும்? நமக்கு வெளியில் செயல்படும் சக்திகளை எல்லாம் பொருட்படுத்தாமல் நாம் நம் இயல்பிலேயே காலூன்றி நிற்க முடியுமா? என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்த்துக் கொள்ள வேண்டும். உலகத்தின் எல்லாச் சக்திகளும் சேர்ந்தாலும் நம்மை அசைக்க முடியாது நிலைமைகளைச் சாதித்தால்தான் நாம் விடுதலை பெற்றவர் ஆவோம், அதற்கு முன்பு ஆகமாட்டோம். இதுதான் முக்தி, மோட்சம். இது இங்கேயே – இவ்வுலகிலேயே கிடைப்பதுதான். இந்த நிலை கிடைக்கும் அந்த நொடிதான் மோட்சம்.
(விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 6 – பக்.194-195)

உயிர் உடம்பை விட்டு நீங்காது இருக்கும்போது முக்தி நிலையை அடைந்ததாக ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள்.

அவ்வாறு உயிர் உடம்பை விட்டு நீங்காமல் இருக்கும் போது இறைவனை சரணாகதி அடைவதால் கிடைக்கும் இன்பம் வைகுண்டத்தில் கிடைக்கும் இன்பத்தைவிட அதிகமாக உள்ளது என்கின்றார்கள்.

அவர்கள். அவ்வாறு இன்பம் அடையும் நிலையை சீவன் முக்தி நிலை என்கின்றனர்.

சீவன் – முக்தி நிலையில் கிடைக்கும் இன்பம் இறந்த பின் கிடைக்கும் மோட்ச சுகத்தை காட்டிலும் மேலானதாக இருப்பதாக நம்மாழ்வார் கூறுகிறார்.

“ஒன்றுண்டு செங்கண்மால். யானுரைப்பது,
உன்னடியார்க் கெஞ்செய்வ னென்றே யிரித்திநீ,-நின்புகழில்
வைகும்தம் சிந்தையிலும் மற்றினிதோ, நீயவர்க்கு
வைகுந்த மென்றருளும் வான்.” (நம்மாழ்வார்)

இதைத்தான் பாரதியாரும் பாடுகிறார்..

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்த்திடலாம் என்றே எண்ணி இருப்பார்
பித்த மனிதர் அவர் சொல்லுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங்கு ஊதேடா சங்கம்!!!

- செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் என்று பித்த மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.
- வாழும் காலத்தில் சுத்த அறிவு நிலையில் களிப்பவர்களே தூய வாழ்க்கை நடத்துபவர்கள்.
- வாழும் காலத்தில் முக்தி பெற வாழ்வதுதான் வாழ்வு..
- ஐமபுலன்களில் உழன்று கொண்டிருக்கும் மானுடம். பொன்னையும் மண்ணையும் உண்மையென்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனரே?
  அறிவின் முழுமையே சொர்க்கம். அறிவின் வறுமையே நரகம்.
- அறிவின் உயர்நிலையில் அன்பும் கருணையுமாய் வாழ்வதே செர்க்கம். அறிவின் வறுமை தரும் ஆணவம், கன்மம், மாயையில் வாழ்வது நரகம்.
- உடலாலோ. மனதாலே யாருக்கும் துன்பம் தராமல் வாழ்வதும், துன்பத்தைக் காணுமிடத்து அதை முடிந்த அளவு போக்குன்ற அன்பைப் பெருக்குவதும் சொர்க்கம். இதற்கு மாறுபட்டு வாழ்தலே நரகம்.
- மூலத்தைப் பற்றிய ஞானத்தைத் தருகிறது வேதாத்திரியம். வேதாத்திரியத்தில் இறைத் தத்துவம் நமக்கு முக்தியைத் தரவல்லது.
- "தத்துவத்திற்கு விஞ்ஞானப் பார்வை தருவது அவ்வளவு எளிதல்ல.
- தத்துவத்தை விஞ்ஞானப் பூர்வமாக உணரும் துணிவும், மெய் ஞானத்தை தத்துவார்த்தமாக அலசி ஆராய்க்கிற அறிவுத் திறனும் கொண்ட ஒரு மகான்தான் இந்த இணைப்பைத் தரமுடியும். அதைத் தருபவரே வேதாத்திரி மகரிஷி.
- ஞாலத்தின் மூலத்தினை உணர்ந்த அதன் தன்மைகளை ஆராய்ந்தறிவது ஞானத்தில் முதல்நிலை.
- அத் தன்மைகளுடைய மூலம் எவ்வாறு ஞாலமாகிறது என்னும் தன்மாற்றச் சரித்திரத்தைத் தெளிந்து உணர்வது ஞானத்தில் இரண்டாம் நிலை.

- ஞானத்தின் இரு நிலைகளையும் கடந்து. எள்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல பாவித்து அனைத்துயிருக்கும் ஒத்தும் உதவியும் வாழ்கின்ற பக்குவத்தை பெறுதல் ஞானத்தின் மூன்றாம் நிலை.
- ஞானத்தின் மூன்றாவது நிலையில் மனித அறிவு முழுமையடைகிறது. "அறிவின் முழுமை அது முக்தி" என்பது வேதாத்திரியம்.
- முக்தியின் வெளிப்பாடு அன்பு. அறிவின் மு ழுமையா கிய முக்தி என்பது நாம் முயன்று முயன்று அடைய வேண்டிய நிலை.
- வாழ்கின்ற போதுதான் முக்தி என்ற சொல்லுக்கு அர்த்தமுண்டு.
- வாழ்க்கை முடிந்து சடப்பொருளான பிறகு, அவரே இல்லை என்றாகிவிட்ட பிறகு, அவர் முக்தி அடைந்தார் என்றால் அதில் என்ன பொருளிருக்க முடியும்?
- வாழ்கிறபோது முக்தி அடையவில்லை என்றாலும் அவர் இறந்த பிறகு அவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் முக்தி அடைந்தார் என்று சொல்வது உலகியல் மரபு.
- மூலத்தை உணர்ந்து. மும்மலங்களை அகற்றி அன்பின் முழுமையாய், தவவாழ்வும் அறநெறியும் வாழ்வதே முக்தி. வாழ்க வளமுடன்.

## ஜீவன் முக்தி என்றால்!"

சிவலோக பதவி", "வைகுந்த பதவி", "முக்தி டைதல்"இவையெல்லாம் இறந்து போனவர்களை அடையாளப் படுத்தும் வார்த்தைகள் என்றே பலரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். உண்மை அதுவல்ல....

முக்தி அடைதல் என்பதன் தூய தமிழ் வடிவம் "விட்டு விடுதலையாதல்" அல்லது "வீடு பேறடைதல்" என்பதேயாகும்.

யோகத்தில் உயர் நிலையான சமாதி நிலைக்கு அடுத்த நிலைதான் இந்த முக்தி நிலை. இதனை மீண்டும் பிறவா பேரின்ப நிலை என்றும் சித்தர்கள் குறிப்பிடுகின்றனர்.

இறப்பிற்குப் பின்னர் முக்தி அடைதல் என்பது வெறும் வாய் வார்த்தை எனச் சொல்லும் சித்தர்கள், வாழும் காலத்தில், இந்த உடல் இருக்கும் போதே அத்தகைய பிறவா பேரின்ப நிலையினை அடைந்திட வேண்டும் என்கின்றனர்.

இந்த முக்தி நிலையை அடைய ஒரே வழி யோக மார்க்கம் என்று சொல்லும் சித்தர்கள், இந்த யோக உறுப்புக்கள் எட்டு நிலைகளைக் கொண்டதாக கூறியிருக்கின்றனர்.

அவை முறையே இமயம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பதாகும்.

## வெள்ளரிப்பழ முக்தி – காஞ்சி மகாபெரியவர்

மாயையை விட்டு ஞானி விலகுகிறான் என்றில்லாமல், ஞானியை விட்டே மாயை விலகுகிறது என்ற இந்த விஷயம் த்ரயம்பக மந்திரத்திலும் சொல்லியிருக்கிறது.

‘பந்தத்திலிருந்து உர்வாருகம் மாதிரி விடுபடணும்’ என்று முக்கண்ணனான பரமேச்வரனைப் பிரார்த்திக்கும் மகா மிருத்யுஞ்சய மந்திரம் அது. உர்வாருகம் என்றால் வெள்ளரிப் பழம்.

வெள்ளரிப் பழம் மாதிரி விடுபட வேண்டும் என்றால் என்ன?

அந்தப் பழம் முற்றிக் கனிந்த பிற்பாடும் மற்றப் பழங்கள் மரத்திலிருந்து விழுகிறாற்போல் விழுவதில்லை.

என்ன காரணமென்றால் அது பழுப்பது, காய்ப்பது எல்லாமே மரத்தில் இல்லை; கொடியில்தான். வெள்ளரி என்பது கொடியே தவிர செடியோ மரமோ இல்லை.

அந்தக் கொடியையும் பந்தல் போட்டு படர விடும் வழக்கம் கிடையாது. முழுக்க பூஸ்பரிசம் இருந்தால்தான் அந்தக் கொடியின் வளர்ச்சிக்கு நல்லதென்பதால் நிலத்திலேயேதான் படர விடுவது.

அதனால் என்னவாகுமென்றால் ஒரு வெள்ளரிக்காய் நன்றாகக் கனிவதும் நிலமட்டத்தில்தான்; உயரத்தில் ஒரு கிளையிலோ, பந்தலிலோ இல்லை.

இப்படிப் பழம் முற்றி கனிந்தவுடன் காம்பு தானே இற்றுப் போய்விடும். ஆனாலும் பழம் இருந்த இடத்திலேயேதான் இருக்கும்.

ஏனென்றால் அதுதான் விழமுடியாமல் நில மட்டத்திலேயே இருக்கிறதே! கொடி பாட்டுக்கு படர்ந்துகொண்டே இருக்கும்.

அப்போது பழம் எந்த இலைப் பாகத்தோடும் காம்போடும் ஒட்டிக் கொண்டிருந்ததோ அவையும் நகர்ந்து போய்விடும். அதாவது காம்புதான் இதை விட்டு விலகிற்றே தவிர இது விலகுவது, விடுபடுவது என்ற காரியத்தைக் கூடப் பண்ணுவதில்லை!

இதே போலத்தான் – ஞானி சம்சார பந்தத்திலிருந்து விடுபடுவதென்பது, அது ஒரு விருக்ஷம் மாதிரியும், இவன் அதில் முற்றிப் பழுத்து விழுவது மாதிரியும், இவன் அதில் முற்றிப் பழுத்து விழுவது மாதிரியும் இல்லை.



ஞானத்தில் அவன் பழுத்த பழமான பின்னும், தான்பாட்டுக்கு இருந்தபடியேதான் இருப்பான். வெளியிலே காரியம் பண்ணினாலும் உள்ளே அசலமாக, சலனமேயில்லாமல்தான் இருப்பான்.

சம்சாரத்திலிருந்து விடுபட்டு அப்புறம் மோக்ஷம் என்று எங்கேயோ ஒரு லோகத்திற்குப் போவது என்ற காரியம் அவனுக்கில்லை.

த்வைதிகள் தான் அப்படி எங்கேயோ உள்ள ஒரு மோக்ஷத்திற்கு போவது. அத்வைத ஞானி இங்கேயே, இந்த லோகத்திலேயே, சரீரத்திலே இருப்பதாகத் தெரியும் போதே ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றவன்.

அதுதான் விடுபட்ட நிலையான மோக்ஷம் என்பது. ‘விடுபட்ட’ என்றாலும் இவன் ஒன்றும் விடுபடும் கார்யம் பண்ணவில்லை.

இவன் பண்ணியது ஆத்மாவே குறியாக விசாரம் செய்ததுதான். அதனால் ஸாக்ஷாத்காரம் வந்து, தான் ஆத்மாவே என்று தெரிந்து கொண்டு அதுவாகவே இருப்பான்.

அப்போது பந்தம், ஸம்ஸார மாயை என்பது அதுவே கத்தரித்துப் போய்விடும். த்வைதம் நகர்ந்து ஓடிப்போய்விடும்.

வெள்ளரிப்பழம் பூமியிலே இருப்பதுபோல இவனும் லோகத்தில் முந்தி எங்கே இருந்தானோ அங்கேயே ஜீவன் முக்தன் என்ற பெயரில் தொடர்ந்தும் இருந்து கொண்டிருப்பதாகத் தெரியும்.

ஆனாலும் லோகத்தில் தனி ஜீவ மனத்தின் வாழ்க்கை என்று வேரோடிப் படர்ந்திருந்த ஒரு கொடியோடு இவனுக்கு முந்தி இருந்த பிணைப்பு இப்போது கத்தரித்துப் போயிருக்கும்.

இவனாக விடுபடாமலே, இவனை விடுவித்துவிட்டு, அது ஓடிப் போயிருக்கும்! இதுதான் வெள்ளரிப்பழ முக்தி!

வெள்ளரி விஷயத்தில் அது வெடிப்பதால் சத்தம் எழும்பும். இந்த மகான்கள் விஷயத்தில் சத்தமாகச் சொல்லாமல், ஜோதியோடு ஜோதி கலந்தது என்று சொல்கிறார்கள். அதாவது ஒலிக்குப் பதில் ஒளியைச் சொல்கிறார்கள்.

ஞானத்தில் போய்தான் என்றில்லாமல் உசந்த பக்தியிலேயே போய் நந்தனார், மீராபாய் போன்றவர்களும் இப்படித்தான் உடம்பைச் சவமாக விட்டுப் போகாமலே, அப்படியே சரீரம் மறைந்து

அகண்டாகாரமானதாக இருக்கிறது. இதையும் வெள்ளரிப்பழ முக்தியாக உவமிக்கலாம்.

## விடுதலைக்கான வழி – வேதாத்திரியம்

சூரிய ஒளியினால் சூடு பெற்றுக் கடலிலிருந்து ஆவியாக மாறி மேகமாகி அது குளிர்ந்து எந்த இடத்தில் மழையாகப் பெய்தாலும் அந்த நீர், தனக்குப் பிறப்பிடமாகிய கடலை நாடியே ஓடுவது போல,

இறை நிலையிலிருந்து புறப்பட்டுப் பல தலைமுறைகளாக ஜீவன்களில் இயங்கி, மனிதனிடம் இறுதியாக வந்து இயங்கிக் கொண்டிருக்கும் சிற்றறிவு, முற்றறிவான இறைவனை நாடியே அலைகின்றது.

அத்தகைய வளர்ச்சி நிலையில் உடல் தேவைக்கான பொருள், புலன் இன்பம் இவற்றில் ஈடுபடுகிறது.

இங்கு தான் அறிவானது தான் போக வேண்டிய இடத்தை மறந்து, அடுத்தடுத்து தொடர்பு கொண்ட பொருட்கள், மக்கள், புலன் இன்பம் இவற்றோடு தொடர்பும், மேலும் பொருள்களும் இன்பமும் எளிதாக மேலும் மேலும் உழைக்காமலே கிடைக்கக்கூடிய வழிகளாகிய அதிகாரம், புகழ் இவற்றின் மீது நிறைவு பெறாத அவாவையும் பெருக்கிக் கொள்ளுகிறது.

எவ்வளவு தான் பொருளோ, புலன் இன்பமோ, புகழோ, அதிகாரமோ அமைந்தாலும் இன்னும் வேண்டும், இன்னும் உயர்வாக வேண்டும் என்ற உணர்ச்சி வயமான மன அலையில் இயங்குகிறது.

இதனால் அளவு மீறியும், முறை மாறியும், ஞானேந்திரியங் களையும், கர்மேந்திரியங்களையும் பயன்படுத்த அவைகள் பழுதுபட்டு உடல் துன்பம், மன அமைதியின்மை, செயல் திறமிழத்தல், இதனால் சமுதாயத்தில் மதிப்பிழத்தல் ஆகிய குறைபாடுகளோடு வருந்திக் கொண்டே இருக்க வேண்டியதாகிறது.

மெய்யுணர்வு பெற்ற குருவழியால் அறம் பயின்று இறைநிலை விளக்கமும் பெறும்போதுதான் தடம் மாறிய மன ஓட்டம் நேர்மையான இயக்கத்திற்கு வரும். துன்பத் தொடரிலிருந்து விடுதலை கிடைக்கும்; வேறு எந்த வழியும் மனிதன் உணர்வதற்கு இல்லை என்கிறது வேதாத்திரியம்.

## 4. பிறவிக் கடலை கடப்பதுதான் முக்தியா?

- முக்தி பெற செயல்புரிதலும் அன்பும் தேவை. (விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 9 – பக்376)

அடைதற்கரிய பகுத்தறிவு வாய்ந்த மானுடப் பிறவியை பெற்ற நாம் பந்த பாசங்கள் நிறைந்த இவ்வுலகில் அலை கடல் துரும்பு போல அல்லற்பட்டு வாழ்ந்து வருகிறோம்.

இல்லற வாழ்வின் சிற்றின்பங்களில் மூழ்கி பெரும் பேரின்பமாகிய எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருளை மறந்து, எல்லையில்லா துன்பங்களுக்கு ஆளாகி அவதிப்படுகிறோம்.

இம் மானிடப்பிறவி முற்பிறப்பில் செய்த புண்ணியப் பலன்களின் விளைவாய் ஏற்பட்ட பெருமை மிக்க பிறவியாகுமென்று பெரியோர் கூறுவர்.

பிறவி நோய்க்குக் காரணமாக இருக்கும் இடம் இம் மானுடப் பிறவி என்பதும் உண்மையே.

இது பிறவி என்னும் பெரு நோயைப் போக்கும் சிறந்த சாதனமாகவும் உள்ளது.

பிறவி என்னும் பெருங் கடலை நீந்திக் கடந்தால் தான் இறைவன் திருவருளைப் பெறமுடியும் என்பதை தெய்வப் புலவர் திருவள்ளுவர்

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார் ''

''பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு ''

என்று கூறியுள்ளார்.

நம்மாழ்வாரும் பிறவிக்கடலைக் கடக்கும் உபாயமாக

''வீடுமின் முற்றவும்
வீடு செய்து உம்முயிர்
வீடுடையானிடை
வீடு செய்ம்மினே'' (நம்மாழ்வார்)

நான், எனது என்னும் அகங்கார, மமகாரங்களால் உண்டாகும் இறைவனுக்கு புறம்பானவற்றை விடுங்கள்.

பிறகு உங்கள் ஆத்மாவைப் பரம பதம் தரும் எம்பெருமான் பக்கலில் சமர்ப்பித்து விடுங்கள் என்று கூறியள்ளார்.

பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம் இப்பிறவியின் நிலையாமையை உணர்ந்து கொள்வது மிகமிக அவசியம்

இம்மானுடப் பிறவியின் ஆயுள் நூறு என்று நாம் கணக் கிட்டோமானால் அதில் பாதியான ஐம்பது ஆண்டுகள் உறக்கத்திலேயே கழிந்து விடுகின்றன.

பதினைந்து ஆண்டுகள் உலகமறியா இளமைப் பருவத்தில் கழிந்து விடுகின்றன.
இன்னமும் மீதியுள்ள ஆண்டுகள் நோய், பசி, முதுமை போன்ற துன்பங்களில் வீணாகி விடுகின்றன.

ஆதலால் எனக்குப் பிறவியே வேண்டாம் என்று தொண்டரடிப் பொடி ஆழ்வார் ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள ஸ்ரீரங்கநாதரிடம் வேண்டிக் கொள்கிறார்.இதோ அந்த **அருமையான** பாசுரம்

''வேத நூல் பிராயம் நூறு மனிதர் தாம் புகுவரேலும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே!'' (தொண்டரடிப் பொடி ஆழ்வார்)

தொண்டரடிப் பொடியாரின் திருமாலைப் பாசுரங்கள் சிலவற்றை நாம் அடிக்கடி கேட்டிருப்போம்.

இனிமையும் அழகும் சொல்லுவதற்கு எளிமையுமாகத் திகழ்பவை அவை. அவற்றில் சில...

பச்சைமா மலைபோல் மேனி
 பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
 ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
 இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
 அரங்கமா நகருளானே! (தொண்டரடிப் பொடி ஆழ்வார்)

இந்தப் பாடல் சொன்னாலே அனைவருக்கும் புரிந்துவிடும் எளிய தமிழ்ப் பதங்களால் ஆனது.

இங்கே இன்னொன்றையும் யோசித்துப் பார்க்க வேண்டும். குலசேகரப் பெருமான், திருமலையில் படியாகவும் மீனாகவும் இன்னும் என்னவெல்லாம் திருமலையப்பனை அண்டி நிற்கின்றவோ அதெல்லாமும் தான் ஆக பிறப்பெடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்.

தொண்டரடிப்பொடியாழ்வரோ பிறவி வேண்டாம் என்கிறார்.

பிறவிக் கடல் என்ன சொல்கிறது? வேதாத்திரியம்.......

"தன்முனைப்பு, பழிச்செயல்கள் பதிவு, மாயை
  தளைமூன்றும் மனிதஉயிர்க் களங்க மாகும்.
வன்முறையில் இவை அறிவைப் புலன்கள் மூலம்
  வழுக்கிப் பிறவிக் கடலை நீள வைக்கும்.
உன்வயமாம் அகத்தவத்தால், அகத்தா ராய்வால்,
  உண்மையுணர்ந்து அறுகுணத்தைச் சீரமைத்து,
இன்முறையில் உயிர்கட்குத் தொண்டு ஆற்றி,
  இறைநிலையில் உனை இணைக்கத் தூய்மை உண்டாம்."
(ஞாக.பா.1594)

"தான்" என்று தனது உடலையே கருதிக் கொண்டதால், மனிதனிடம் அதிகாரப்பற்று ஏற்பட்டு விட்டது.

உடலைச் சார்ந்த சேர்ந்த பொருட்களிடம் பற்றும் மக்களிடம் பாசமும் ஏற்பட்டுவிட்டது.

அதனால் இறைநிலையின் ஒரு பகுதியாகத் தானும் இருப்பதை மறந்துவிட்ட நிலை தன்முனைப்பு ஆகும்.

அதனால் பொய், கொலை, களவு, சூது. கற்பழிப்பு ஆகிய பழிச்செயல்கள் பழக்கப் பதிவுகளாகி விட்டது.

உண்மைக்கு மாறான மனநிலை, மாயை அல்லது மயக்கம் ஆகும்.

இந்த மூன்று விலங்குகள் அறிவைத் தடை ஆக்கியுள்ளதால், மனிதனின் ஆன்மாவில், அறிவில் களங்கத்தை ஏற்படுத்தி விட்டது.

இந்த மூன்று களங்கங்களும் அறிவைப் புலன்கள் மூலமாக வன்முறையில் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இயக்கிப் பிறவிப் பெருங்கடலை நீளவைக்கிகது.

பிறவித்தளை அறுபட முடியாமல் மீண்டும் மீண்டும் மனிதன் பிறந்து பிறந்து இறக்கிறான்.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்பதை, தனது சுயம் தெய்வீகம் என்பதை உணர்ந்து, தன்முனைப்பை ஒழித்து இறைமுனைப்பை மலர்த்தினால் பிறவித்தளை அறுபடும்.

அறிவின் கட்டுப்பாட்டில் உடலையும் மனதையும் கொண்டு வருவதற்கான தன்வயமாகும்.


மனப்பயிற்சியாகிய அகத்தவம் இயற்ற வேண்டும்.

உண்மைகளை உணர்வதற்கு அகத்தை ஆய்வுசெய்து ஆறு துர்கு ணங்களை ஒழித்து நற்குணங்களாக சீரமைத்து, உடன் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்து, இறைநிலையில் உன்னை இணைத்துக் கொண்டால் களங்கம் நீங்கி தூய்மை உண்டாகும். பிறவித்தளை அறுபடும்.

பிறவிக்கடலை எளிதாக நீந்த வழிகாட்டுகிறது வேதாத்திரியம். எப்படி?

“பல ஆயிரம் பிறவி எடுத்தேற்றப் பாவப்
பதிவுகளை, ஒரு பிறவிக் காலத்துள் மாற்றி,
நலமடைந்து மனிதனாகித் தெய்வமாகி உய்ய,
நல்லவாய்ப்பு ஆற்றல் இவை நமக்களித்து, இயற்கை
நிலஉலகில் மனிதரிடம் அமைந்துளன, உண்மை.
நேர்முகமாய் கருமைத் தூய்மை உணர்ந்தாற்றிப்
பலனடைய அகத்தவத்தால் பரமுணர்ந்து, அறத்தின்
பாதையிலே ஒத்துதவி வாழும்முறை போதும்” (ஞாக.பா.1743)

என்னிலடங்காத பிறவிகளைத் தாண்டி வந்துள்ளது மனிதகுலம். உடல், உயிர், மனம், அறிவு, தெய்வம் என்பதைப் பற்றி அறியாமலும், உணராமலும் பழக்கத்தின் வழியே வாழ்ந்து வருகிறது மானுடம்.



உடலில் நோய்கள், மனதிலே களங்கம் ஆகியவை வாழ்க்கையில் சிக்கல்களாக துன்ப விளைவுகளை வெளிப்படுத்துகின்றன. அவை அனைத்தும் பாவப் பதிவுகளின் வெளிப்பாடு ஆகும்.

எத்தனையோ பிறவிகளில் வாழத் தெரியாமல் வாழ்ந்து பெற்ற பாவப்பதிவுகளை, மனிதன் முயன்றால் ஒரே பிறவியில் மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்.

வாழ்க்கை நலன்களை அடைந்து, வித்தின் மூலமாக வெளிப்படும் விலங்குநிலைப் பண்புகளை விடுத்து மனிதனாகலாம். அதற்கும் மேல் மாமனித நிலையில் தெய்வமும் ஆகலாம்.

ஆறாவது அறிவு என்ற சிந்தனை செய்யும் நல்ல வாய்ப்பையும், ஆற்றலையும் இயற்கையானது நில உலக மக்களாகி நமக்கு அளித்துள்ளது என்ற உண்மையை உணர வேண்டும்.

களங்கப்பட்டுள்ள கருமையப் பதிவுகளை உணர்ந்து கொள்ள வேண்டும். நேர்மையான வழியில் தூய்மை செய்து கொள்வதற்கு அகத்தவம் இயற்றி, இறைநிலையை உணர்ந்து கொள்ளலாம்.

அறநெறி வழியே, ஒத்தும் உதவியும் வாழும் முறையே போதுமானது ஆகும்.

இறையுணர்வும் அறநெறியும் கருமையத்தைத் தூய்மைப்படுத்தி, பிறவிக்கடலை நீந்தி கரைசேர்வதற்கு உதவி செய்யும்.

வேதாத்திரிய வழியில் நாமும் பிறவிக்கடலை கடந்து ஆனந்த வாழ்க்கை வாழ்வோமாக.

ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!

## 5. பக்தி ஞானம் முக்தி

- பக்தி, கர்மத்தை விடச் சிறந்தது. யோகத்தை விட மேலானது. எவ்வாறெனில், கர்மம், யோகம் என்ற இரு நெறிகளும் ஒரு பயனை நாடி, ஒரு நோக்கத்தை முன் வைத்துச் செய்யப்படுகின்றன. ஆனால் பக்தியோ அவ்வாறில்லை. அதுவே அதற்குப் பயனாகவும், அதுவே அதை அடைவதற்குரிய வழியாகவும், முடிவாகவும் விளங்குகிறது. (விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 2 – பக்.2)

வரலாற்று காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே பின்பற்றப்படும் திருமால் வழிபாட்டினை. அடிப்படையாகக் கொண்ட வைணவத்தின் கருத்துக்களைத் ஆழ்வார்கள் பன்னிருவர். தம் ஆன்மாவால் உணர்ந்து அந்த உயர்ந்த கருத்துக்களின் சாராம்சத்தினை மிகவும் வலிமையாகத் தம் அருளிச் செயல்களான இலக்கியங்கள் வழி வெளியிட்டது அவர்களின் சிறப்பாகும்.

தூய்மையான மனம், பிரதிபலன் பாராத பேரன்பு, அபூர்வமான அசைக்க முடியாத நம்பிக்கை, எளிமை என்ற பண்புகளாக இறைவனை அறிந்து கொண்டனர் ஆழ்வார்கள்.

அந்த இறையனுபவத்தை எல்லா தரப்பு மக்களும் பெற்று உய்ய வேண்டும் என்று விரும்பி அதற்கான எளிமையானதொரு பக்தி வழியைக் காட்டிச் சென்றனர்.

இறைவன் மீது கொள்ளும் பேரன்பே பக்தி ஆகும். இறைவனை அடைவதற்காக காட்டப்பட்ட கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம் இவைகளைப் பற்றி நன்கு அறிந்திருந்த ஆழ்வார்கள், அதில் பக்தி நெறியை தேர்ந்து எடுத்தனர்.

அந்த பக்தி நெறியிலும் பிரபத்தி என்று கூறப்படும் சரணாகதி நெறியினைச் சிறப்பாக கொண்டு அனைவருக்கும் அதனை வழங்கினர்.

ஆழ்வார்கள் கி.பி ஐந்தாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை வெவ்வேற காலகட்டங்களில் வாழ்ந்திருந்தாலும் அவர்களது படைப்புத் தொகுப்பான நாலாயிர திவ்யப் பிரபந்தத்தைப் படிக்கும்போது அவர்களுக்கிடையில் உள்ள கருத்தொற்றுமை நன்கு புலப்படும்.

அதற்குக் காரணம் இறைவனே விரும்பி அவர்கள் வாக்கின் வழித் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான் என்பர்.

இவ்வுலகம் இறைவனது விளை நிலம். இறைவன்தான் உழவன். பக்தி என்னும் விதையை அவன் விதைக்கிறான் என்று திருமிழிசை ஆழ்வார் பாடுகிறார்.

"வித்தும் இடவேண்டும் கொல்லோ விடை அடர்ந்த
பக்தி உழவன் பழமை புனத்து" (திருமிழிசை ஆழ்வார்)

எனவே தான் இறைவனே தன் பரமபதத்திலிருந்து இறங்கி அவதாரங்கள் எடுத்து இவ்வுலகிற்கு வருகிறான்.

தர்மத்திதைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும், தன்னைச் சரண் அடைந்தாரைக் காக்கவும் இறைவன் தானே விரும்பி பற்பல அவதாரங்க்ள எடுக்கிறான் என்பது வைணவர் நம்பிக்கை.

## பக்தியே பக்தியின் பலன்

இறைவனை வழிபடும் எளிய வழிபாட்டு முறைகளைக் காட்டிய ஆழ்வார்களுக்கு நெறியும் குறிக்கோளும் ஒன்றே.

இறைவனை அடையும் வழி பக்தி. அந்த பக்தியால் அவர்கள் அடையும் பயன் பக்தியே.

உண்ணும் சோறு, பருகும் நீர் எல்லாவற்றிலும் திருமாலைக் கண்ட ஆழ்வார்கள் நம் தம் பக்தியை வரும்பி அனுபவித்தனர் எனலாம்.

காலும் எழா கண்ண நீரும் நில்லா உடல்
  சோர்ந்து நடுங்கிக் குரல்
மேலும் எழா மயிர்க் கூச்சும் அறா என
  தோள்களும் வீழ்வு ஒழியா
மால் உகளாநிற்கும் என் மனனே உன்னை
  வாழத் தலைப்பெய்திட்டேன்
சேல் உகளாநிற்கும் நீள் சுனை சூழ் திரு
  மாலிருஞ் சோலை எந்தாய் (பெரியாழ்வார்)

என்ற பெரியாழ்வார் இறை தரிசனம் கிடைத்த போது தனக்கு ஏற்பட்ட உணர்வுகளை அழகாகக் கூறுகிறார்.

இறைவனினடம் தாய், தந்தை, குழந்தை, தலைவன், உடையவன், நண்பன் போன்ற உறவு முறைகளை ஆழ்வார்கள் அனுசரித்தனர். இறைவனிடம் ஒரு நெருக்கத்தினை ஏற்படுத்தினர்.

இறைவனைத் தலை வணங்கிப் பரகால நாயகி. பராங்குச நாயகி என்ற நிலைகளில் நின்று உணர்ந்துள்ள பாடல்களைப் பாடி இறைவனைப் பக்தி செய்து மகிழ்ந்தனர்.

ஆழ்வார்கள் பாடல்களைக் கற்கும் யாவருக்கும் இந்த இறையின்பம் கிடைக்க வேண்டும் என்பதே ஆழ்வார்களின் குறிக்கோள் ஆகும்.

## ஞானம் – பக்தி – முக்தி:

ஒரு குழந்தைக்குத் தகப்பன் யார்? என்ற உண்மையை பொதுவாகத் தாயார் அறிந்துள்ள நிலையைப் போன்று, மற்றவர்களால் அறிந்து கொள்ள முடியாது.

.

இது போன்று ஒரு தத்துவத்தைச் சந்தேகமற, மாறமுடியாத, மாற்ற முடியாத வகையில் அறிந்து கொண்ட திட நிலை "ஞானம்" எனப்படும்.

.

வளர்ப்போர் சொல்லிக் கொடுத்ததைத் திருப்பித் திருப்பிச் சொல்லும் கிளியை போன்று, தன் தாயார் சுட்டிக் காட்டிய ஒருவன் தான் தனது தகப்பன் என்று உறுதியாகச் சொல்லும் மகனின் மனோ நிலையோர்களால் எழுதப்பட்டுள்ள கருத்துக்களே சரியென நம்பி உறுதி கொண்டிருக்கும் நிலையும் இம்மாதிரியே.

.

எள்ளுக்குள் எண்ணையைப் போன்று பிரபஞ்சம் எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து நின்று இயங்கும் ஆன்மா, ஜீவன், கடவுள், இயற்கை, சக்தி என்று பலவாறாகச் சொல்லப்படும் அரூப சக்தி நிலையை அறிவால் அறிந்து, வாழ்வில் அமைதி பெறுவதே, அறிவில் தெளிவு பெறுவதே, "முக்தி" எனப்படும்.

"அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி.
அறிவை அறிவால் அறியப்பழகுதல் யோகம்.
அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி.
அறிவை யறிந்தோர் அன்பின் அறமே ஞானம்" (ஞாக.பா.1356).

.

"மெய்ப்பொருளாக இருப்பது இறைஆற்றல்;
அதனுடைய அசைவாக இருப்பது பரமாணு.
அதனுடைய கூட்டமாக இருப்பது தோற்றம்".

.

"எந்தப் பொருளைப் பார்த்தாலும் 'தோற்றம், அணுக்கூட்டு, பரமாணு, அதனுள் மெய்ப்பொருள்,' என்று பார்க்கப் பழகிக் கொள்ளுங்கள்".

## ஞானம் தேடும் பக்தர்கள்:

“தேடுகின்ற பொருள் என்ன, ஏன் நமக்கு,
தெரிந்தவர் யார், கிடைக்குமிடம்எது, ஈதெல்லாம்
நாடுகின்ற வழக்கம் சிலபேரே கொள்வார்
ஞானமதைத் தேடும் சிலர் இதை மறந்து
ஓடுகின்றார் உருக்கமுடன் தேடுகின்றார்;
ஒடுங்கி நின்று அறியும் அதை விரிந்து காணார்
வாடுகின்றார்; உளம்நொந்து இருளைத்தேட
விளக்கெடுத்து போவதைப்போல முரண்பாடன்றோ”.(ஞாக.பா.1438)

காலத்திற்கேற்ற வழிபாடு வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

“மனிதர் தன்அறிவு செயல்திருந்தி ஓங்க
மதிமிக்கோர் தெய்வ வழிபாடு சொன்னார்.
மனிதனிடம் மனிதன் பொருள்பறிக்கும் வாய்ப்பாய்
மாறி வருகின்ற திது பரவலாக,
மனிதனுடைய அறிவுசெயல் திருத்தத் திற்கு
மாற்றாகக் கேடுபல விளையக் கண்டோம்.
மனிதரை இவ்விண் ஞானகாலம் ஒப்ப,
மனநிலையை மெய்விளக்கத் தவம் உயர்த்தும்.” (ஞாக.பா.1336)

.

“வணங்கி வந்தேன் கற்பனையால் தெய்வத்திற்கு
வழக்கமாய் தொடர்ந்து வந்த பழக்கத்தாலே,
வணங்குபவன் உரியபொருள் வரும்பயன்கள்
வணங்கும் போதாராய்ந்தேன், வணக்கம்விட்டேன்
வணங்குகிறோம் ஒன்றை நமக்கு உயர்ந்ததாயும்
வாழ்வளிக்கும் ஒன்றாயும் நினைத்துக்கொண்டு.
வணங்குபவன் வலிமைபெற்று உயர்வடைந்தால்
வாழ்வினிலே கடமைசெயல் உயர்வாய்க் காணும்”. (ஞாக.பா.1337)

பக்தியும் ஞானமும் – வேதாத்திரியம்

“மனிதமனம் உயர்ந்தறிவின் மதிப்புணர்ந்து வாழ,

மனதை வளப்படுத்தும் முறை பக்தி வழியாகும்.
புனிதகுணம் உருஅமைந்த பொருத்தமான சிலைகள்,
புனைந்துரைத் கற்பனையாம் கதைகள் இவைகொண்டு
தனிமனிதன் சிறுவயதில் வணங்குமுறை நன்று.
தக்க வயதிருபதுக்குள், தவகுருவின் மூலம்
கனிவடைய கருதவத்தால் சிவம் அகத்தே கண்டு,
கற்பனைகளைக் கடந்த இயற்கை வாழ்வு வேண்டும்."
(ஞாக.பா.1344)

"சுத்தவெளி தெய்வம்என்ற உண்மை மறைத்திட்டு
சூதாட்டமாய் உருவச் சிலைகளையே காட்டி,
அத்துவிதம் ஏட்டினிலே, அனைத்து செயல் குற்றங்கள்
அனைத்துலகும் இச்சேற்றில் ஆழந்து கிடப்பதனால்,
உத்தமாம் உயர்அறிவு ஒளிவிடுவதில்லை. அதனால்
ஒருவர்பிறர் வாழ்வின்வளம் பறித்து வாழலாச்சு!
வித்தையில்லை! விளக்கமிது! உலக ஆட்சி மூலம்
வேர் அழிப்போம் போர்உலகில் தோன்றாத முறையில்."
(ஞாக.பா.1348)

# 6. பாவங்கள் நீங்கப் பெற்ற நிலை

- தியானம் எனப்படுவது இடையறாத நினைப்பாகும். ஒரு பாத்தரத்திலிருந்து இன்னொரு பாத்திரத்திற்கு ஊற்றப்படும் இடையறவு படாத எண்ணெயின் ஒழுங்கைப் போன்று இடையீடின்றி இறைவனைச் சிந்திப்பதுவே தியானம் எனப்படும். இப்படி இடையீடின்றித் தொடர்ச்சியாக கடவுளை நினைக்க இயலுமாயின் அப்போது உலக பந்தங்கள் யாவும் அறுபட்டு விடுகின்றன. எனவேதான் இடைவிடாது இறைவனை நினைப்பதே முக்திக்கு வழி என்று சாத்திரங்கள் முறையிடுகின்றன. (விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 2 – பக்.5)

பரமபதம் அடைவதற்குத் தடைகளாக உள்ள பாவங்கள் இறைவனைக் கண்டதால் நீங்கப் பெற்றதாக ஆழ்வார்கள் கருதினார்கள்.

செய்யத் தகாதன செய்தலும், செய்யத் தகாதனவற்றை செய்யாமலிருத்தலுமாகிய இருவகைக் குற்றங்களை மனிதன் செய்யும் பாவங்களாகும்.

இறைவனாய்க் காண்பதால் அப்பாவங்கள் நீங்குகின்றன. திருமால் தன்னை ஏற்றுக் கொண்ட பின் தன் பிறவித் துன்மமான கடல் வற்றிப் பேரின்ப பெரும் பதம் பெற்றதனை

"பறவையேறு பரமபுருடா நியென்னைக் கைக்கொண்டபின்
பிறவியென்னும் கடலும்வற்றிப் பெரும்பத மாகின்றதால்
இறவுசெய்யும் பாவக்காடு தீக்கொளி வேகின்றதால்
அறிவையென்னு மமுதஆறு தலைப்பற்றி வாய்க் கொண்டதே"

என்ற பாசுர வரிகளில் பெரியாழ்வார் நயம்பட எடுத்தியம்புகிறார்.

அப்பெருமானுக்குத் தமக்குக் கிடைத்த நன்மைகளையும் தம்முடைய பாவங்கள் ஒழிந்து அமுதக் கடலில் திளைத்து திளைத்து பேரின்பமடைகிறார் ஆழ்வார்.

தீயினல் இட்ட துளசி எவ்வாறு காணாமல் போகுமோ அவ்வாறு இறைவனைப் பாடி மனத்தினால் தியானிக்க பழவினைகளும் புகுவினைகளும் காணாமல் போய்விடும். பேரின்பமும் அனைவருக்கும் கிடைக்கும் என்பதனை

"தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும் செப்பேலோ ரெம்பாவாய்!" (**திருப்பாவை – 5**)



கண்ணனாகிய இறைவனை நாங்கள் தூய்மையாக நீராடி, மணம் வீசும் மலர்களுடன் காண புறப்படுவோம். அவனை மனதில் இருத்தி அவன் புகழ் பாடினாலே போதும்! செய்த பாவ பலன்களும், செய்கின்ற பாவ பலன்களும் தீயினில் புகுந்த தூசு போல காணாமல் போய்விடும்.

## வேதாத்திரியம் தரும் வினைத்தூய்மை

வினைஎதுவும் நலம் தீது என்பது இல்லை
விளைவும் அதனை ஆற்றுபவர் நோக்கம் கொண்டே
வினையதனை நலம்தீது எனப் பிரிப்போம்.
விழிப்புடனே எண்ணம் எழும்போதே தேர்வோம்.
வினை, காலம், இடம், தொடர்புப் பொருளுக்கு ஏற்ப
வெவ்வேறு அளவு இன்ப துன்பம் நல்கும்.
வினைகள் தமை உடல்தகுதி, உலகம் ஒப்ப,
உயர்இயற்கை நியதி ஒக்க ஆற்றமேலாம்." (ஞாக.பா.1285)

இயற்கை என்ற பேராற்றலானது,, பல நீண்ட காலமாக, மிகவும் நுட்பமாகத் தனது வயிற்றில் வைத்து. மனித உடலை பல லட்சம் தலைமுறைகளாக வடிவமைத்து அளித்துள்ளது.

அகக் கருவிகள் ஐந்து, செயல்கருவிகள் ஐந்து ஆகிய பத்துக் கருவிகள் மூலம் உடல் இயங்குகின்றது.

தேவைக்கேற்ற மலர்ச்சி, சூழ்நிலைக்கேற்ற மாற்றம் என்ற வகையில் இயற்கையின் தன்மாற்றத்தால் உடல் கிடைத்துள்ளது

என்ற உண்மையைத் தன் முனைப்பின் காரணமாக மனிதன் மறந்து விடுகிறான்.

அந்த பேராற்றலுடைய இயற்கையே தன்னுள் இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது என்ற உண்மைகளையும் மறந்து விடுகிறான்.

புலன்களின் துய்ப்பில் இன்பம் இருப்பதாகக் கருதி மயக்க நிலையில் மேலும் மேலும் இன்பம் வேண்டி எந்த உறுப்பைப் பயன்படுத்தி துய்த்துக் கெடுத்தாலும், மனிதனுக்குள் இருக்கிற இயற்கை அவனுக்குப் பாடம் கற்றுத் தருவதற்காக, அந்த உறுப்பின் அணு அடுக்குகளை சீர்குலைத்து துன்பத்தை ஏற்படுத்தி நோய் என்ற விளைவையும் கொடுக்கிறது என்ற உண்மைகளை அறிவோமாக.

"வினைத்தூய்மை பெறவேண்டின், மனத்தின் தூய்மை
  வேண்டுவது இன்றியமை யாததாகும்.
வினைத்தூய்மை ஒழுக்கமுடன் கடமை, ஈகை,
  விளங்கும் அறநெறி நிற்க விரைந்து ஓங்கும்.
வினைத்தூய்மை வித்தான மனத்தின் தூய்மை
  விண்ணுணரும் அகத்தவத்தால் ஓங்கும் உய்ய.
வினைத்தூய்மை மனத்தூய்மை ஒன்றை ஒன்று
  உயர்த்தி மனிதன் தெய்வமறியச் செய்யும்." (ஞாக.பா.1286)

வினை என்பது கர்மா அல்லது செயல் ஆகும். செயல்களில் நன்மையானது தீமையானது என்பது எல்லாம் இல்லை.

செயலின் மூலமாக ஏற்படும் விளைவு செயலாற்றுபவரின் நோக்கம் ஆகியவற்றைக் கொண்டே, நன்மையானது அல்லது தீமையானது என்று பிரித்துக் கூறுகிறோம்.

எண்ணம்தான் செயலாக மலர்ச்சி பெறுகிறது. செயலுக்கு முன் நிலையாகிய எண்ணம் எழும் போதே விளைவைத் தெரிந்து விழிப்புடன் செயல்படுவோம்.

செயல், செயலுக்குரிய காலம், செயலுக்குரிய இடம், செயலால் தொடர்பு கொள்ளும் பொருள் ஆகியவற்றிற்கு ஏற்றபடி வெவ்வேறு அளவுகளில் இன்பம் துன்பம் வெளிப்படும்.

உடல் ஆற்றலின் தகுதியோடு, உலக மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், இயற்கை நியதிக்கு உட்பட்டு செயல்களைச் செய்தால் அச்செயல்கள் எல்லாம் உயர்வானவையாகும். சரி.

வினைப் பதிவுகளை கழிப்பது எப்படி? விடையாக மீண்டும் வருகிறது வேதாத்திரியம்

"தவமுறையும் அறநெறியும் பற்றப் பற்றத் தருக்கென்ற
 தருக்கென்ற தன்முனைப்புக் குன்றிப் போகும்.
பவவினைக்ள புதிது எழா. முன்னம் செய்த
 பதிவுகளும் மறைந்து மெய்ப்பொருள் காணும்.
சிவநிலையை சீவனிலே உணர்ந்து கொண்டால்,
 சிறுமைதரும் மனமயக்க மாயை ஏது?
எவரெனினும் இவ்வழியால் அன்றி உய்ய
 ஏதுவழி வேறுலகில்? எண்ணிப் பாரீர்!" (ஞாக.பா.1578)

தவத்தையும் அறநெறியையும் பற்றி வாழ்ந்தால் வினைப்பதிவுகளை போக்கிவிடலாம்.

"வினைபோகமே தேகம் கண்டாய்" என்பதை உணர்ந்து, நாமும் தவத்தையும் அறநெறியையும் இருகண்களாகப் போற்றி ஆனந்தமாக வாழ்வோமாக

# 7. மோட்ச இன்பத்தை அடையும் வழி

- முக்தி என்பது என்ன? இறைவனுடன் வாழ்வதே. எங்கு? எங்கானாலும் சரி, இங்கே. இப்போதே,எல்லையற்ற காலத்தில் ஒவ்வொரு கணமும் சிறப்பானதே. இது வேதங்களின் பழைய கொள்கையாகும். (விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 9 – பக்.293)

மோட்சத்தை அல்லது முக்தியை அடைவது எப்படி? என்றும் ஆழ்வார்கள் சிந்தித்திருக்கிறார்கள்.

பிறவிக்குக் காரணமாயுள்ள பாவ புண்ணியங்களிலிருந்து ஆன்மா விடுபட வேண்டும்.

உலகம் வேற ஆன்மா வேற என்று அறிந்து உலகத்தின் மீதுள்ள பற்றைத் துறந்த பின்னரே ஆன்மா மோட்சயின்பத்தை அனுபவிக்க முடியும் என்று நம்மாழ்வார் சொல்லுகிறார்.

அந்தர்யாமியாய் உணர்ந்த இறைவனைக் கணப்பொழுதும் பிரிய இயலாத நிலையும் ஆழ்வாருக்கு ஏற்படுகின்றது அதன் பயனாய அவனைப் போகவிடாது தன்னுள் இருத்துகின்றார்.

“புக்கின்ற புக்குன்னைக் கண்டுகொண்
டேன் இனிப் போக விடுவதுண்டு”

என இறைவனை விடாத நிலையைப் பாடுகின்றார்.

இவற்றால் பெரியாழ்வாரின் அருள் அனுபவம் தன்னுள் இறைவனை நிறுத்திய சீவனின் செயலாக அமைகின்றது.

உலகுக்கு ஆதியான பெருமானை அன்போடு வழிபட்டு விரைவில் வைகுண்டத்தை அடையவே ஆழ்வார்கள் விரும்புகிறார்கள்.

அப்படி வைகுண்டத்தை ய  டைய இடையூறாக இருக்கின்ற தமது உடலை நோயாகக் கருதுகிறார் திருமழிசையாழ்வார்.

அவர் வைகுண்டத்தை விரைவில் காண விரும்பும் தனது விருப்பத்தை பாசுர வரிகளில் அழகுற எடுத்துரைக்கிறார்.

ஆய்ந்து கொண்டு ஆதிப் பெருமானை அன்பினால்
வாய்ந்த மனத்திருத்த வல்லார்கள் -ஏய்ந்த தம்
மெய்குந்த மாக விரும்புவரே தாமுந்தம்

## வைகுந்தம் காண்பார் விரைந்து-79-

ஆழ்வார்கள், பகவானிடம் பக்தியில் மூழ்கி, அவருடைய கருணையால் அந்த பகவானை அனுபவிப்பதையே முதன்மையாகக் கொண்டும், உபதேசிப்பதை ஆரம்பிப்பதற்கு முன்னால் மோட்சம் அடைவதையே குறிக்கோளாக கொண்டு வாழ்ந்து, மோட்சமும் அடைந்தனர்.

"**வையம் தகளியா, வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக**" என்று ஒரு விளக்கை பொய்கை ஆழ்வாரும்,

"**அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடு திரியா**" என்று மற்றொரு விளக்கை பூதத்தாழ்வாரு ம் , ஏற்ற

"**திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்**" என்று பேயாழ்வாரும் நமக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் திருவந்தாதிகளை, நூறு நூறு பாடல்களாக கொடுத்து அருளினார்கள்.

## முக்தி என்றால் - வேதாத்திரியம்.

எல்லா உயிரினங்களின் வாழ்க்கைக்கும் நோக்கம் உண்டு, மனித வாழ்வின் நோக்கம் இயற்கை அறிவில் முழுமை பெற்று இயற்கை இன்பங்களை அனுபவித்து அறிவில் நிறைவும் அமைதியும் பெறுவதே என்பதை வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவர்கள் உணர்த்தி வந்திருக்கின்றனர்.

இந்த அறிவு முழுமை நிலையே முக்தி என்பதாகும்.

முக்தி நிலையை அடைந்தவர்களுக்கு நீடித்த அமைதியில் மனம் இயங்கும், அத்தகையவர்களுக்கு உலக இன்பங்களில் நிறைவு பெறாத ஆசை இருக்காது.

இயற்கை இரகசியங்களை உண ர்ி நத அறிவு நிலையில் அறிவுக்கு நிறைவு நிலை கிட்டுவதோடு அன்பும் கருணையும் இயல்பாக ஊற்றெடுக்கும்.

தான் அடைந்த பேரின்ப நிலையை வையகம் பெற தொண்டாற்றி பேரின்பத்தில் திளைத்திருப்பார்கள், ஆணவம், கன்மம், மாயை என்னும் ஆன்ம கள க் க ங்கள் நீங்கி மரண பயம் அற்ற நிலையில் வாழ்வார்கள்.

இதுவே இறைநிலை அடைதல், சமாதி நிலை அடைதல் என்பதாகும்,

## மரணமில்லாப் பெருவாழ்வு

மனிதனின் ஆறாவது அறிவிற்கு இயற்கையின் நியதிகளை உணர்ந்து அதை ஓரளவு வெல்லும் ஆற்றல் உண்டு.




அந்த ஆற்றலைப் பயன்படுத்தி உயிர் உடலில் இருந்து பிரியும் வேகத்தை கட்டுப்படுத்திக் கொண்டால் மரணத்தை நீண்ட நாட்கள் தள்ளிப்போடலாம்.

சீவகாந்த ஆற்றல் அதிகமாக இருக்க வேண்டுமானால், உயிர்த்து க் க ள் அதிகமாக இருக்கவேண்டும்.

உயிர் சத்துக்களை அதிகரிக்க விந்துநாதம், தூய்மையாகவும் இருக்க வேண்டும்.

வித்து சக்தியை அளவு அதிகமாகவும், அழுத்தமாகவும் தூய்மையாகவும் ஆக்கிவிட்டால் நீண்ட நாள் உயிர் வாழலாம்.

முதுமையைத் தள்ளி போடலாம். இளமையோடு வாழலாம். நோயில்லாமல் உடல் நலத்துடன் வாழலாம்.

தேவையான வித்துவை போதிய அளவு கெட்டிப்படச் செய்துவிட்டால் உயிர் பிரியாமலே அதை உடலிலேயே நிலைக்க வைத்து விடவும் செய்யலாம்.

வாழ்ந்தது போதும் என்ற நினைவு ஏற்படும் போது மன இயக்கத்தை மாத்திரம் நிறுத்திக் கொள்ளலாம்.

மனஇயக்கம், உடலியக்கம் இரண்டும் நின்று பிட் ட பின் உடலிலேயே உயிர் அடக்கம் பெற்று இருக்கும் நிலையைத்தான் சீவசமாதி என்றும் மரணமில்லாப் பெருவாழ்வு என்றும் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

முக்தி என்று ஒரு நிலை சமைத்தாய் – அங்கு
முழுதினையும் உணரும் உணர்வுஅமைத்தாய்
பக்தியென்று ஒரு நிலை வகுத்தாய் – எங்கள்
பரமா பரமா பரமா!" (பாரதியார்)

எனவே நீண்ட நாள் உயிர் வாழ காயகல்ப பயிற்சி நமக்கு உறு துணையாகவும், உடலுக்கும், மனதிற்கும், வாழ்க்கைக்கும் சிறந்த துணையாக உள்ளது.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்
பொறிவாயில் ஐந்து வித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.
கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.
தன் உயிர் தான் அறப் பெற்றானை ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும்.

மகான்கள் "வாழ்வாங்கு வாழ்ந்து உணர்த்திய வாழ்வியல் உண்மைகள் உலகம் உள்ளளவும் வாழும் என்பதால் அவர்களுடைய

அறிவு மரணமில்லா நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இதுவே வேண்டும் போது உயிர்விடுதல் என்பதாகும்.

இன்பம் இன்பம் இன்பம் இன்பம்

"பிறவியின் நோக்கத்தை அறிந்த போதும்,
பின்அந்த எல்லையினை அடைவதற்கு
அறநெறியில் விழிப்போடு பொறுப் புணர்ந்து,
ஆற்றி மனம் செயல் தூய்மை ஆனபோதும்.
உறவுகளில் உண்மைநிலை உணர்ந்து ஆற்றி,
உயர்வான துறவுநிலை உணர்ந்த போதும்,
துறவுநிலை முடிவாகப் பெற்ற போதும்,
துய்த்த பேரின்பம் எவ்வாறுரைப்பேன்? (ஞாக.பா.1849)

## 8. துரியாதீத தவத்தின் ஆணி வேர்?

- கடவளிடம் செலுத்தும் பேரன்பே முக்திநெறி. "அன்பே, உங்களைப் பிரிந்து என்னால் வாழ முடியாது" என்று உங்கள் மனைவி கூறுகிறாள். பணத்தை இழந்து விட்டால் சிலரைப் பைத்தியக்கார விடுதிக்குத்தான் அனுப்ப வேணடியிருக்கிறது. நீங்கள் கடவுளிடம் அத்தகைய அன்பு வைத்திருக்கிறீர்களா? பணத்தை, நண்பர்களை, தாய் தந்தையர்களை,. சாகோதரர்களை. சகோதரிகளை, இந்த உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் நீங்கள் துறந்துவிட்டு, இறைவனின் அன்பில் சிறிது தரும்படி வேண்டும் போதுதான் முக்தி நெறியைக் கண்டுபிடித்தவர்கள் ஆவீர்கள். (விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 9 – பக்376-377)

மனவளக்கலை மன்றங்களிலும் அறிவுத் திருக்கோயில்களிலும் நாம் பயின்று பயிற்சி செய்து வரும் துரியாதீத தவத்தினை நாம் அனைவரும் இயற்றி வருகிறோம்.

இந்த துரியாதீ தத் தின் ஆணி வேர் எங்கிருந்து வந்தது தெரியுமா? அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியே சொல்கிறார்.

“சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழே ஓ
சூழ்ந்து அதனில் பெரிய பர நல் மலர்ச் சோதீ ஓ
சூழ்ந்து அதனில் பெரிய சுடர் ஞான இன்பமே ஓ
சூழ்ந்து அதனில் பெரிய என் அவா அறச் சூழ்ந்தாயே” (நம்மாழ்வார்)

“நன்றாய் ஞானம் கடந்து போய் நல்லிந்திரியம் எலாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே.” (நம்மாழ்வார்)

என்றும் பாடிய வைணவப் பெரியோர்கள் பாடிய பாடல்களையும் படித்து ணர்ந்தபோதுதான் தூயவெளியாக நிறைந்து பேரியக்கமண்டலம் அனைத்தையும் தன்னகத்தே தாங்கிக் கொண்டிருப்பது தான் தெய்வநிலை என்ற உணர்வு பிறந்தது.

அந்த மனநிலையிலும் “இறைவா” என்று அழைத்துப் போற்றி மகிழ்ந்தேன்.

பக்தி வழியில் “இறைவா” என்று அழைத்ததில் பெற்ற இன்பத்திற்கும், விளக்க வழியில் (□□□□□□□□□□□□□) மனதை விரித்து அகண்டாகாரமாய் நின்று “இறைவா” என்று அழைத்துப் போற்றி பெற்ற இன்ப அனுபவத்திற்கும் இடையே ஏதும் கூடுதல் குறைவு இருந்ததில்லை.

சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழே ஓ
சூழ்ந்து அதனில் பெரிய பர நல் மலர்ச் சோதீ ஓ

சூழ்ந்து அதனில் பெரிய சுடர் ஞான இன்பமே ஓ
சூழ்ந்து அதனில் பெரிய என் அவா அறச் சூழ்ந்தாயே (நம்மாழ்வார்)

அவன் பாழோ, சோதியோ, இன்பமோ தெரியவில்லை. என் ஆசையெல்லாம் அவனாகவே சூழ்ந்து கிடக்கிறான் – என்று கூறும் நம்மாழ்வார் பாடலில் வீடு பேறு பெற்று உயரும் வழியைக் காண்கிறோம்.

வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

இறைவெளி அணு முதல் அண்டங்கள் உயிர்கள் அனைத்துமாகி மனிதன் வரையில் வந்த இயல்பூக்க நியதியில் (□□□□□□□□ □□□□□□□) மனிதனிடம் இயக்க அலையான மனதுக்கு நிலை பொருளாகவும், அடித்தளமான அறிவாகவும் விளங்குகிறது.

தன்னிலை விளக்கம் பெற்றவர்கள் அறிவே “நான்” அதுவே இறைநிலை என்ற விளக்கம் பெற்றுள்ளனர்.

அனைத்துல  கங்களுக்கும் வீடாக உள்ள இறைவெளியே, நான் என்னும் அறிவுமாக உள்ளது என்ற பேருண்மையை உணர்ந்தவர்கள் வீடுபேறு பெற்றவர்கள் ஆவர். இதே கருத்து நம்மாழ்வார் பாடலிலும் ஒளிரக் காணலாம்.

“நன்றாய் ஞானம் கடந்து போய் நல்லிந்திரியம் எலாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே.”

அரும்பெரும் பாழாகவும், உலப்பிலா (அழிவிலா) ஒன்றாகவும் உள்ள இறைவெளியே வீடு என்று இங்கும் குறிப்பிடப்படுகிறது.

அவ்வீடே நான் எனும் அறிவுமாக விளங்குகிறது. என்ற பேரறிவைப் பேறாகப் பெற்றவர் வீடுபேறு பெற்றவராவார்.

வீடுபேறு என்னும் முக்தி – வேதாத்திரியம்

“வீடென்னில் இடமாம். தேடிடத் தேடிட

வீடிலாவீடு வெட்ட வெளியாகும்.
வீடெனும் மெய்ப்பொருள் வேக இயக்கமே.
விண்முதல் நிகழ்ச்சிகள் விவேகம் ஈறாக
வீடெனும் ஆதியே பொருள் எனக் கண்டபின்,
விவேகம் அதனுடைச் சிறப்பென விளங்கும்
வீடே அறிவெனும் விளக்கம் பெறுதலே,
வீடுபேறாகும். விளங்கி விளக்கினேன்." (ஞாக.பா.1847)

குடியிருப்பதற்காக செற்கல், மண் போன்றவற்றால் சாதாரணமாக வீடு என்கிறோம்.

ஆனால் ஆன்மீகத்தில் வீடு என்னும் வார்த்தை இடத்தைக் குறிப்பதாகவும், ஆன்ம விடுதலையைக் குறிப்பதாகவும் உள்ளது.

சுத்தவெளி என்னும் இறைநிலை இல்லாத இடமோ பொருளோ இயக்கமோ விளைவோ இல்லை.

குடியிருப்பு என்னும் வீட்டின் நாலு சுவரையும் மேற் கூரையையும் இடித்து அகற்றிவிட்டால் அது இடம். அங்கே சுத்தவெளிதான்.

பல பிறவிகள் எடுத்து வந்துள்ள மனிதன் தனது சுயம் தெய்வீகம், இறைநிலையின் ஒரு பகுதி அறிவாக இருக்கிறோம் என்பதை மறந்து, அழிந்து போகக்கூடிய உலகியல் விவகாரங்களில் பற்றுக் கொண்டு விட்டான்.

உலகியல் பற்றுக்களால் அழியக்கூடிய உடலைத் தான் என்று கருதி மயக்க நிலையில் வாழ்கிறான்.

உலகியல் பற்றுக்களில் இருந்து ஆன்மாவை விடுவித்தால் வீடுபேறு அடையலாம்.

இதுவே ஆறாவது அறிவு பெற்ற மனிதன் அடைய வேண்டிய பேறு ஆகும். அந்நிலையை முன்னோர்கள் முக்தி, மோட்சம் என்றார்கள்.

மீண்டும் பிறவா நிலை எய்துதல் ஆகும். வீடு என்னும் இடத்தை அறிவைக் கொண்டு, அறிவை உயர்த்தி, விரித்துத் தேடினோமே யானால் வீடில்லா வீடாகிய சுத்தவெளியை உணரலாம்.

அந்த சுத்தவெளியே உண்மைப் பொருள் ஆகும். அதனுடைய வேக இயக்கம்தான் விண் முதல் அனைத்துத் தோற்றங்களும் நிகழ்ச்சிகளும் ஆகும்.

இறைநிலை முதல் பிரபஞ்சத் தோற்றம் வரை இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற அதன் அறிவாகிய விவேகத்தால்தான் நடைபெறுகிறது என்பதை உணர்ந்தால் ஆற்றல் என்னும் வேகத்திற்கு உட்பொருள் அறிவு என்ற விவேகம்தான் என்ற சிறப்பினை விளங்கிக் கொள்ளலாம்.

வீடு என்பது அறிவு. தனக்குள்ளாகவும், எங்குமே நீக்கமற நிறைந்துள்ளது என்று விளங்கிக் கொள்வதுதான் வீடுபேறு என்பதை நான் விளங்கிக் கொண்டு, விளங்கிய வழியில் விளக்கியுள்ளேன்.

வீடு பேற்று நெறியை அறிவது எப்படி? வேதாத்திரியம் விடை தருகிறது.

"வெட்டவெளி பிரபஞ்சப் பொருள்கட் கெல்லாம்
வீடாகும். விண்கடந்த வானறிந்தால்,
வெட்டவெளி அணுஅறிவு ஒன்றாய்ப் போகும்.
வீடுபேறு எனும் உயர்ந்த பதமும் ஈதே!" (ஞாக.பா.1848)

நாம் நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளோம். உலகமோ சூரியக் குடும்பத்தில் மூன்றாவது வட்டப் பாதையிலே தற்சுழல் இயக்கத்துடன் சூரியனைச் சுற்றி வருகிறது.

சூரியக் குடும்பமோ பால்வெளி மண்டலத்தில் பலகோடி சூரியக் குடும்பங்களிலே ஒன்றாக சுழன்று கொண்டுள்ளது.

பால்வெளி மண்டலமோ, எண்ணிலடங்காத மண்டலங்களை உள்ளடக்கிக் கொண்டு சுழன்று கொண்டுள்ள பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாக சுழன்று கொண்டுள்ளது.

பிரபஞ்சத்திற்கு அப்பாலும் சுற்றிலும் சூழ்ந்தும் உள்ள சுத்தவெளி என்னும் வெட்டவெளியின் ஒரு பகுதியில் பிரபஞ்சமே சுழன்று கொண்டுள்ளது.

ஆகவே பிரபஞ்சத்திலே நாம் காணும் சடப்பொருள், சீவன் ஆகிய அனைத்துத் தோற்றப் பொருட்களுக்கும் இடமாக வீடாக இருப்பது சுத்தவெளியாகும்.

உடல் பற்று, உலகியல் பற்றுக்களிலிருந்து விடுதலை பெற்றால் வீடுபேறு என்னும் உயர்ந்த நிலையை மனிதன் பெறலாம்.

இதைத்தான் “உறவிலே கண்ட உண்மைநிலைத் தெளிவே துறவு” என வேதாத்திரியம் சொல்கிறது.

மனம்தான் மனிதனாக இயங்கிக் கொண்டுள்ளது. அந்த மனதை, மனத்திற்கு மூலமான விண் என்னும் உயிரில் ஒடுக்கிப் பழகினால், மன அலை நின்று நிலைக்கு வரும்.

மனதின் அடித்தளமாகிய அறிவில் நிலைத்தால் அறிவு விரிந்து. பிரபஞ்சத்தைக் கடந்து அப்பாலாக உள்ள சுத்தவெளியில் கலப்புற்று விடும்.

மனிதனின் சிற்றறிவைப் பேரறிவை உள்ளடக்கமாகக் கொண்ட சுத்தவெளியில் கலப்புறச் செய்வதே வீடுபேறு என்ற உயர்ந்த பதம் என்னும் பக்குவம் ஆகும்.

வீடுபேறு என்னும் பெரும் பதம் அடைந்தவர்கள் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கக் கூடியவர்கள் ஆவர்.

நாமும் அவர்களைப் போல் வாழ்ந்து மற்றவர்களுக்கும் தொண்டாற்றி- இன்புற்று -ஆனந்தமாக வாழ்வோமாக!

## 9.முக்தி நிலைகளில் பாடிய ஆழ்வார்கள்

- அளவு கடந்த அன்பின் வெளிப்பாட்டில் ஆழமான அமைதியுடன்ஆரவாரமற்று வாழ்கிற வாழ்க்கையின் மறுபெயர் முக்தி.

ஆன்மாக்கள் பல கோடிப் பிறவிகளில் சேர்த்து வந்துள்ள கர்மங்களை முழுவதுமாய் களைந்து, மீண்டும் பிறவாத நிலையை அடைவது 'முக்தி' என்று குறிக்கப் படுகிறது.

முக்தி வகைகள் நான்கு என்று புராணங்கள் பறை சாற்றுகிறது. சாலோக்கியம், சாயுச்சியம், சாமீப்பியம், சாரூப்பியம்.

சாலோக்கியம்: இறைவனின் உலகத்தை அடைந்து தொண்டு செய்தல்.

சாமீப்பியம்: இறைவனின் உலகத்தை அடைவதோடு அல்லாமல், அருகாமையில் இருந்து தொண்டாற்றும் பேறு.

சாரூப்பியம்: உபாசிக்கும் இறை வடிவத்தின் திருவுருவத்தையும் இறைச் சின்னங்களையும் பெற்று, இறைவனுக்கு தொண்டு செய்தல். (சில உதாரணங்கள்: திரிசூலம், சங்கு, சக்கரம், சக்தி வேல், நெற்றிக் கண்கள்).

சாயுச்சியம்: இறைவனோடு ஒன்று படுதல். ஜீவாத்ம – பரமாத்ம ஐக்கிய நிலையை குறிப்பது.

இந்த நான்கு வகை முக்திகளை ஆழ்வார் பாசுரங்களில் சொல்லவில்லை.

ஆனால் இந்த நான்கு வகை முக்திகளின் தன்மைகளை ஆழ்வார்கள் அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள்.

குலசேகர ஆழ்வார் சாமிப்ய (இறைவனக்கு அருகில் இருப்பது) முக்தி பெற வேண்டும் என்று தமது ஆசையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

“ஊனேறு செல்வத்து உடல் பிறவி யான் வேண்டேன்
ஆனேறேழ் வென்றான் அடிமைத் திறமல்லால்
கூனேறு சங்கம் இடத்தாந்தன் வேங்கடத்து
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.” (குலசேகர ஆழ்வார்)

நாளுக்கு நாள் உடலில் சதையை அதிகரிக்கச் செய்யும் செல்வத்தை உடைய மானிடனாக பிறக்க நான் விரும்பவில்லை.

எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதையே நான் விரும்புகிறேன்.

பாஞ்சான்னியம் என்னும் சங்கினை இடக்கையில் ஏந்தியிருக்கும் எம் பெருமானின் திருவேங்கடமலை மீதுள்ள கோனேரி என்னும் அ ழி க ய திருக்குளத்தில் வாழும் நாரையாக நான் பிறக்க விரும்புகிறேன் என்ற தனது ஆசையினை மேற்கண்ட பாசுரத்தில் குலசேகராழ்வார் தெரிவிக்கின்றார்.

அவரே மற்றொரு பாசுரத்தில் கோயில் வாசலில் கிடக்கும் ஒரு படியாக இருக்க விரும்புவதாகவும், அப்படிக் கிடப்பதால் இறைவனின் பவள வாயை பார்த்துக் கொண்டேயிருக்கும் நிலை தனக்குக் கிடைக்க விரும்புவதாகவும் கூறுகிறார்.

*“செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே*
*நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்*
*படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே”*
(குலசேகர ஆழ்வார்)

எல்லா ஊர்களிலும் உள்ள திருமால் கோவில்களிலும் சந்நிதியின் முன் கிடக்கும் படியைக் குலசேகர ஆழ்வார் படி என்றும் இன்றும் வழங்கப்படுவதை நாம் காணலாம்.

அவர் நான்காம் திருமொழி முழுவதிலும் நாரையாக, மீனாக, , செண்பக மரமாக, புதராக, காட்டாறாக, போகின்ற வழித்தடமாக அல்லது ஏதேனும் ஒரு பொருளாகக்கூட பிறக்கக் கடவேன் என்பதாகப் பாடுகிறார்.

சாயுச்சிய முக்தி நிலை

இறைவனுடைன் எவ்வாறு ஒன்றறக் கலக்க வேண்டுமென்பதை திருமங்கை ஆழ்வார் அழகான உவமை மூலம் பாடுகிறார்

"இரும்பனன்றண்ட நீர்போல் எம்பெருமானுக்கு என்தன்

அரும் பெறலன்பு புக்கிட்டு அடிமை பூண்டு உய்த்து போவேன்" (திருமங்கை ஆழ்வார்)

நன்றாகப் பழுக்கக் காய்ச்சிய இரும்பின மீது விடும் நீர்த்துளிகள் எவ்வாறு இரும்பையே ஐக்கியமுற்று காணமல் போகின்றனவோ அவ்வாறே நானும் இறைவன் மீது பக்தி செலுத்தி அவனில் ஐக்கியமாக விரும்புகிறேன்.

இறைவனோடு ஐக்கியமாகக் இந்நிலையைத்தான் சாயுச்சிய முக்தி என்பர். அதை அடைய வேண்டும் என்ற தம்முடைய விருப்பத்தை திருமங்கை ஆழ்வார் தமது இந்த பாசுரத்தில் வெளிப்படுத் தி யள ளார்.

உடலைத் துறந்த உயிர் அடையும் முக்தி எவ்வாறு இன்பமானதாக இருக்குமோ அதே இன்பத்தை இறைவனை நினைப்பதால் உயிர் உடலோடு இருக்கும் போதே கிடைத்து விடுகிறது என ஆழ்வார்கள் கருதுகிறார்கள்.

ஆழ்வார்கள் இவ்வாறு பக்தி வாழ்க்கை வாழும் போது இவ்வுலகிலும் மோட்ச இன்பத்தை அனுபவிக்கின்றனர். உயிர் பிரிந்த பின்னும் அதை அடைதல் என்பது இதனால் விளங்குகிறது.

வீடுபேற அடைவதற்கான உபாயங்களைக் கடைப்பிடித்து எம்பெருமானின் திருவருளைப் பெற்று பக்தர்கள் மட்டும் பரமபதத்தை அடைய முடியும்.

பிறப்பு இறப்பு என்னும் சக்கரத்திலிருந்து விடுதலை பெற்று பரமபதம் சென்ற ஆன்மா மீண்டும் பூவுலகில் பிறப்பதில்லை.

எனவே பரமபத உலகை மீளா உலகு என்று கூறுகிறார்கள். பிரளய காலத்திலும் இவர்களுக்கு அழிவு ஏற்படுவதில்லை.

பரமபதம் அடைந்த ஆன்மா அனைத்து விதத் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று பேரானந்தத்தை அனுபவிக்கிறது.

நான்குவித முக்திகளை அடைய .இறைநிலை அடைய, உணர, கலக்க வேதாத்திரியம் எளிமையான வழி காட்டுகிறது.

தவம்:

“தெய்வ அறிவே திருந்திய அறிவாம்;
உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே;
செய்யும் வினைகளைச் சீரமைத்திட
ஐயமில்லை அறும் பிறவித்தொடர்.”

இயற்கை முறை தவம் (Simplified Kundalini Yoga) :

“ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
 உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
 அறிவினிலே நிலைத்து விடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
 நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
 இயற்கை முறை சிறப்புடைத்து ஈதே தவமாம்.” (ஞாக.பா.1473)

### நிறைநிலை

"இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விட்டு
ஏற்படும் ஓர் அமைதியில் விழிப்பாய் நிற்க
நிறைநிலையே தானாக உணர்வதாகும்
நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கும் மட்டும்
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக்கொள்ள,
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்
கரை நீங்கி அறிவு மெய்ப்பொருளாகும்
கரைந்துபோம் தன்முனைப்பு காணும் தெய்வம்" (ஞாக.பா.1487)

- அன்பும் கருணையும் கொண்டு பெற்றோருக்கு அன்புள்ள மகனாக அல்லது மகளாக,
- இல்லறத்தில் அன்புள்ள கணவனாக அல்லது மனைவியாக,
- பெற்ற பிள்ளைகளுக்குப் பொறுப்புள்ள நல்ல தந்தையாக அல்லது தாயாக,
- உற்றார் உறவினர்களுக்கு நல்ல சுற்றமாக,
- ஊரார்க்கு உதவும் கரங்களாக
- நாம் வாழ்வோமேயானால் அதுவே முக்தி.

இந்த முக்தியை அடைந்த அளவே நமது வாழ்க்கையின் வெற்றி. இறந்து அடைகிற நிலையல்ல முக்தி.

இறப்புக்குப் பெருமை சேர்க்குமாறு வாழ்கிற வாழ்க்கையே முக்தி.

இந்த முக்திக்கு முறையான வழியே வேதாத்திரியம். மனவளக்கலை மன்றங்கள். அறிவுத் திருக்கோயில்கள்.

## 10. பிரம்ம ஞானமே முக்தி

- கடவுள் தரிசனம் மூன்று வகைப்படும். 1. மிகவும் கீழான நிலையில் உள்ள தரிசனநிலை. நம்மைப் போன்று கடவுளுக்கும் ஓர் உடல் இருப்பதாகக் காண்பது. 2. இதைக் காட்டிலும் உயர்ந்த தரிசன நிலை. மனிதனின் உயர் குணங்களை எல்லாம் ஒவ்வொன்றாகக்

கடவுளுக்கு ஏற்றிக் காணும் நிலை. இவ்வாறே, உயர்ந்த காட்சியை அடையும்வரை, ஆண்டவனைக் காணும்வரை, நாம் படிப்படியாக மேலே செல்வது.. 3. மிக உயர்ந்த தரிசன நிலை. இவ்வாறே, படிப்படியாக மேலே சென்று உயர்ந்த காட்சியை அடையும் நிலை, கடவுளை நேரில் காணும் நிலை. (விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 2 – பக்.241)

ஆழ்வார்களின் பாடல்களில் பக்தி நெறியுடன் ஞானநெறிக்கு செல்லும் பாடல்களையும் நாம் காணலாம்.

இறைவனையே சாதாகாலம் நினைத்துக் கொண்டிருக்கும் ஆழ்வார்கள் பாடல்களிலே பிரம்ம ஞானத்தை நாம் காணலாம்.

ஆழ்வார்கள் இறைவனை அகக்காட்சியாக பிரம்மத்தையும் இயக்க அலையான மனதையும் ஒன்றாகக் காண்கிறார்கள். இந்தப் பெரும் பேறான அகக்காட்சியே பிரம்மஞானம்.

பேராற்றல் பெற்ற உயிரினங்களில் ஆறறிவோடு உள்ள தனி மனிதன்தான் சிறப்பு வாய்ந்தவன்.

அதுமாத்திரம் அல்லாது பிரபஞ்சத்திலேயே ஆதி நிலையிலிருந்து மனநிலை வரையில் நடந்த எல்லா நிகழ்சிசகளையும் ஒரே பார்வையாக அகக் காட்சியாகக் காணக்கூடிய வல்லமை உடைய அறிவுடையவன்.

அத்தகைய நிலையில் அந்த அறிவுக்குப் பெயர் பிரம்மஞானம்.

இத்தகைய அறிவுடையோர்களாக ஆழ்வார்கள் வாழ்ந்தார்கள். பாடினார்கள். மானுடத்தை உயர்த்தினார்கள்.

பக்தி நெறியில் வாழ்ந்த பூதாத்தாழ்வார் ஞான நெறிக்கு சென்று ஞானச் சுடர் விளக்கை ஏற்றுகின்றார்.




"ஞானத்தை, அறிவு பெருக்கும் தமிழை விரும்பிய நான், அறிவாகிய சுடர் விளக்கினை எப்படி ஏற்றினேன் தெரியுமா? உள்ளத்து அன்பையே அகலாக, எண்ணெய் திரி முதலியவற்றைத் தாங்கும் கருவியாக அமைத்தேன்.

அன்பின் முதிர்ச்சியான ஆசையை நெய்யாகக் கொண்டேன். எம்பெருமானை எண்ணி இன்பத்தால் உருகுகின்ற உள்ளத்தையே எண்ணெயில் இட்ட திரியாகக் கொண்டேன்.

இவ்வாறு தகழி, நெய், திரி முதலியவற்றைச் சேர்த்து நன்றாக மனம் உருகி ஞான ஒளியாகிய விளக்கை திருமாலுக்காக ஏற்றினேன்" – என்று தன்னுடைய இரண்டாம் திருவந்தாதியின் முதல் பாசுரத்திலேயே கூறுகிறார் பூதத்தாழ்வார்.

"அன்பே தகழியா, ஆர்வமே நெய்யாக
இன்பு உருகு சிந்தை இடுதிரியா – நன்பு உருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்" (பூதாத்தாழ்வார்)

என்பது அந்தப் பாசுரம்.

ஞானத்தமிழ் புரிந்ததாகச் சொல்லும் ஆழ்வார், இப்பாமாலையின் மற்றுமோர் பாடலில் தன்னைப் பெருந்தமிழன் என்கிறார்.

யானே தவம் செய்தேன்; ஏழ் பிறப்பும் எப்பொழுதும்,
யானே தவம் உடையேன்; எம்பெருமான்! யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்;
பெருந்தமிழன் நல்லேன் பெரிது.

"நானே பெருந் தமிழன். எல்லாப் பிறவிகளிலும் எப்போதும் தவம் புரிந்த நான், அத்தவத்தின் பயனை இப்போது பெற்றேன்.

தமிழில் தொடுத்த சொல் மாலைகளை நின் திருவடிகளில் செலுத்தும் பேறு பெற்றேன். பெரிதான தமிழ்த் துறைகளில் மிகவும் சிறப்பு பெறும் பேறுடையன் ஆனேன்" என்கிறார்.

உயிரினங்கள் துயரமின்றி வாழ ஒரே வழி இறைவனைத் தொழுவதே யாகும் என்பது இவர் கொள்கை.

“அற்றது பற்றெனில் உற்றது வீடு உயிர்”
(திருவாய்மொழி, 1.2.5)

என்பார்.

வெட்ட வெளியான சுத்தவெளியான இறைவனே ஞாலத்தைப் படைத்தான். அதிலிருந்து எல்லாவற்றையும் படைத்தான் என்பதை அறிந்ததாக நம்மாழ்வார் பாடுகிறார்.

“அவனே அகல் ஞாலம் படைத்து இடந்தான்
அவனே அஃதுண்டு உமிழ்ந்தான் அளந்தான்
அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்றும் எல்லாமும் அறிந்தனமே.” (நம்மாழ்வார்)

விண் கடந்த சோதியாய், ஞான மூர்த்தியாய் விளங்கும் இறைநிலையை போற்றுகிறார் திருமழிசை ஆழ்வார்.

விண்கடந்த சோதியாய்! விளங்கு ஞான மூர்த்தியாய்
பண்கடந்த தேசமேவு பாவநாச நாதனே!
எண்கடந்த யோகினோடு இரந்துசென்று மாணியாய்
மண்கடந்த வண்ணம்நின்னை யார்மதிக்கவல்லரே! (திருமழிசைஆழ்வார்)

வெட்டவெளியாக சுத்தவெளியைப் பற்றி பாடி மகிழ்கிறார் நம்மாழ்வார்.

“சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழே ஓ
சூழ்ந்து அதனில் பெரிய பர நல் மலர்ச் சோதீ ஓ
சூழ்ந்து அதனில் பெரிய சுடர் ஞான இன்பமே ஓ
சூழ்ந்து அதனில் பெரிய என் அவா அறச் சூழ்ந்தாயே” (நம்மாழ்வார்)

“நன்றாய் ஞானம் கடந்து போய் நல்லிந்திரியம் எலாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து

சென்றாங்கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே." (நம்மாழ்வார்)

பிரம்மமே அனைத்தும், பிரம்மத்தைத் தவிர வேறொன்றும் இல்லை என்ற சத்தியத்தை உணர்த்துகிற கேன உபநிடத்தில் காணலாம்.

ஆன்மா எல்லா உயிர்களிலும் நிறை ந திரு க்கிறது. அவ்வாறே அறியப்படுகிறது.

எல்லா உயிர்களிலும் நிறைந்ததாக அதனைத் தியானிக்க வேண்டும். ஆன்மா எல்லா உயிர்களிலும் நிறைந்திருப்பதை யார் அறிகிறானோ அவனை எல்லா உயிர்களும் நேசிக்கின்றன.

பிரம்மாகிய பேரறிவே நமது அறிவு என்று உணர்ந்த ஞான நிலை. வேதாத்திரியம் சொல்லும் போது

"அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்
அறிவு முழுமை அது முக்தி" (ஞாக.பா.2)

என்கிறது. எல்லா உயிர்களும் ஒருவனை நேசிக்கின்ற அளவே அவனது முக்தி நிலை.

முக்தி என்பது மரணத்திற்குப் பின் அடையக்கூடிய நிலை அல்ல. மாறாக நாம் வாழ்கிற காலத்திலேயே வேண்டாததை வடிகட்டி, வேண்டியதற்கு படிகட்டி பிற உயிர்களை எத்துணையும் பேதமுறாது தம் உயிர் போல் எண்ணி, அனைத்து உயிர்கட்கும் அன்பு செய்கிற பக்குவத்தை நாம் அடைந்து விட்டால், நாம் அடைந்த நிலையே முக்தி.

முக்தி நிலையை முழுமையாக அடையாவிட்டாலும், இதை அடைவதற்கான பாதையிலாவது சற்று முன் செல்ல வேண்டும்.

அந்தப் பாதையில் நாம் மேலும் மேலும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோமா என்று அடிக்க அகத்தாய்வு செய்து கொள்ள வேண்டும்.

வினைப் பதிவுகள் மாற மாற மனிதன் மாறுகிறான். வினைப் பதிவுகளை அகற்ற அகற்ற அவன் முக்தி நிலையில் முன்னேறுகிறான்.

தனக்கோ பிறருக்கோ, தற்காலத்திலேர, பிற்காலத்திலோ தீங்கு விளைவிக்காத செயலையே செய்கிற பக்குவத்தை அவன் அடைந்த அளவே அவனது முக்தி நிலையின் அளவுமாகும்.

### வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி

YOUTUBE LINKS

1. முக்திக்கு ஏற்றது மானிடப் பிறவி https://youtu.be/AHCDSLCt0Mc
2. மனிதப் பிறவியின் நோக்கமே முக்தி https://youtu.be/hNECtIoyGpg
3. ஜீவன் முக்தி நிலை https://youtu.be/h4YybtN0fCo
4. பிறவிக் கடலை கடப்பதுதான் முக்தியா?
   https://youtu.be/vfUBAtW_XrE
5. பக்தி ஞானம் முக்தி https://youtu.be/JdSP7vl-IWE
6. பாவங்கள் நீங்கப் பெற்று நிலை https://youtu.be/J_Ct_T4JJD0
7. மோட்ச இன்பத்தை அடையும் வழி https://youtu.be/wDNqkSrbQwg
8. துரியாதீத தவத்தின் ஆணி வேர்? https://youtu.be/aCyhSV9tfi4
9. முக்தி நிலைகளில் பாடிய ஆழ்வார்கள்
   https://youtu.be/x4Y8VwrookQ
10. பிரம்ம ஞானமே முக்தி https://youtu.be/KOla25LeXSU
11. வெள்ளரிப்பழ முக்தி https://youtu.be/9gumJBtvUKI

# வேதாத்திரி என்னும் நாமம்

(ஆழ்வார்கள் பாடல் வரிகளில் வேதாத்திரிய நாமம்

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந் துயர் இடும்பையில் பிறந்து

கூடினேன் கூடி இளையவர்-தம்மோடு
    அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வது ஓர் பொருளால்
    உணர்வு எனும் பெரும் பதம் திரிந்து
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்
    வேதாத்திரி என்னும் நாமம் (1)

ஆவியே அமுதே என நினைந்து உருகி
    அவர் அவர் பணை முலை துணையாப்
பாவியேன் உணராது எத்தனை
    பகலும்பழுதுபோய் ஒழிந்தன நாள்கள்
தூவி சேர் அன்னம் துணையொடு புணரும்
    சூழ் புனல் குடந்தையே தொழுது என்
நாவினால் உய்ய நான் கண்டுகொண்டேன்
    வேதாத்திரி என்னும் நாமம் (2)

சேமமே வேண்டி தீவினை பெருக்கி
    தெரிவைமார் உருவமே மருவி
ஊமனார் கண்ட கனவிலும் பழுது ஆய்
    ஒழிந்தன கழிந்த அந் நாள்கள்
காமனார் தாதை நம்முடை அடிகள்
    தம் அடைந்தார் மனத்து இருப்பார்
நாமம் நான் உய்ய நான் கண்டுகொண்டேன்
    வேதாத்திரி என்னும் நாமம் (3)

வென்றியே வேண்டி வீழ் பொருட்கு இரங்கி
    வேல்கணார் கலவியே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினை உடையேன்
    என் செய்கேன் நெடு விசும்பு அணவும்
பன்றி ஆய் அன்று பாரகம் கீண்ட
    பாழியான் ஆழியான் அருளே
நன்று நான் உய்ய நான் கண்டுகொண்டேன்
    வேதாத்திரி என்னும் நாமம் (4)

கள்வனேன் ஆனேன் படிறு செய்து இருப்பேன்

கண்டவா திரிதந்தேனேலும்
தெள்ளியேன் ஆனேன் செல் கதிக்கு அமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உள் எலாம் உருகிக் குரல் தழுத்து ஒழிந்தேன்
உடம்பு எலாம் கண்ண நீர் சோர
நள் இருள் அளவும் பகலும் நான் அழைப்பன்
வேதாத்திரி என்னும் நாமம் (5)

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கு அரசு என்னுடை வாழ்நாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவர் உயிர் செகுத்த எம் அண்ணல்
வம்பு உலாம் சோலை மா மதிள் தஞ்சை
மா மணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான் கண்டுகொண்டேன்
வேதாத்திரி என்னும் நாமம் (6)

இல்-பிறப்பு அறியீர் இவர் அவர் என்னீர்
இன்னது ஓர் தன்மை என்று உணரீர்
கற்பகம் புலவர் களைகண் என்று உலகில்
கண்டவா தொண்டரைப் பாடும்
சொல் பொருள் ஆளீர் சொல்லுகேன் வம்மின்
சூழ் புனல் குடந்தையே தொழுமின்
நல் பொருள் காண்மின் பாடி நீர் உய்மின்
வேதாத்திரி என்னும் நாமம் (7)

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை
பெரு நிலத்து ஆர் உயிர்க்கு எல்லாம்
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன்
செல் கதிக்கு உய்யும் ஆறு எண்ணி
நல் துணை ஆகப் பற்றினேன் அடியேன்
வேதாத்திரி என்னும் நாமம் (8)

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
    படு துயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பு அருளும்
    அருளொடு பெரு நிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
    தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
    வேதாத்திரி என்னும் நாமம் (9)

மஞ்சு உலாம் சோலை வண்டு அறை மா நீர்
    மங்கையார் வாள் கலிகன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வ நல் மாலை
    இவை கொண்டு சிக்கென தொண்டீர்
துஞ்சும்போது அழைமின் துயர் வரில் நினைமின்
    துயர் இலீர் சொல்லிலும் நன்று ஆம்
நஞ்சு-தான் கண்டீர் நம்முடை வினைக்கு
    வேதாத்திரி என்னும் நாமம் (10)

# துணைநின்ற நூல்கள்.


1. நாலாயிரம் 2637 பெரிய திருவந்தாதி பாடல் 53, நம்மாழ்வார்
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
3. நாலாயிரம் 2036 திருக்குறுத்தாண்டகம் பாடல் 5 திருமங்கையாழ்வார்
4. நாலாயிரம் 453 பெரியாழ்வார் திருமொழி 5-3-1 பெரியாழ்வார்
5. நாலாயிரம் 685 பெருமாள் திருமொழி 4-9, குலசேகராழ்வார்
6. இணையதள தகவல்கள்.
7. நாலாயிரம் 2460 நான்முகன் திருந்தாதி பால் 79, திருமழிசையாழ்வார்
8. சான்லாக்ஸ், பன்னாட்டு தமிழ் ஆய்வகம்,
9. ஞானக்களஞ்சிய கவிகள், ஞானமும் வாழ்வும்.

10. இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி.
11. வேதாந்தமும் வேதாத்திரியமும், முனைவர் அழகர் ராமானுஜம்.
12. நாலாயிரம் 677 பெருமாள் திருமொழி 4-1 குலசேகர ஆழ்வார்
13. .நாலாயிரம் 464 பெரியாழ்வார் திருமொழி 5-4-2 பெரியாழ்வார் நாலாயிரம் 473 பெரியாழ்வார் திருமொழி 5-4-11 பெரியாழ்வார்
14. நாலாயிரம் 442 பெரியாழ்வார் திருமொழி 5-1-10, பெரியாழ்வார்
15. நாலாயிரம் 873 திரமாலை – பாடல் 2 – தொண்டரடிப் பொடியாழ்வார்
16. ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும், டாக்டர் விட்ல்தாஸ், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை
17. நாலாயிரம் 478 திருப்பாவை ஐந்தாம் பாசுரம்,

# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது

25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.

7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.

9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே

2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2

4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்

39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1

74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2

75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

76.புலவர் தியாகராஜனார்

77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1

78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2

79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1

80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2

81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3

82.ஆன்மீகம் ஆன்மீகம்

83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1

84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2

85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3

86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

87.சுயமுன்னேற்றம்

88.பத்திரகிரியார் சிந்தனைகள்

89.மன்னார்குடி

90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு

91.பொதுவானவை

92.மனைவிக்கு மரியாதை

93.திருமூலர் சிந்தனைகள்.

94.ஆண்டாள் சிந்தனைகள்

95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்

96.திருக்குறள; சிந்தனைகள்

97.அப்பர் சிந்தனைகள்

98.பட்டினத்தார் சிந்தனைகள்

99.பட்டினத்தார் ஒப்பாய்வு

100.சிவவாக்கியார் சிந்தனைகள்

101.ஔவையார் சிந்தனைகள்

102.சித்தர்கள் சிந்தனைகள்

103.திருமங்கையாழ்வார்

104.வள்ளலாரின் சிந்தனைகள்

105.பசி என்னும் பாவி

106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?

107. Retirement Speech

108. Audio speech part 1

109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?